20

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-உ0] சித்திரபானு—பங்குனி 1943 [பரல் ருு

பொருளடக்கம்

சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் K.C.I.E.
(முகப்புப் படம்)
உரை விருந்து :
சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார்
" அகமும் புறமும் " :
வித்துவான் K. கோவிந்தன்
காலை மலர்ச்சி :
புத்தனேரி ரா. சுப்பிரமணியன்
திருவாரூர்ப் பள்ளு :
வித்துவான் திருவாட்டி சிவ. பார்வதி யம்மையார்
குண்டலகேசி அகவல் :
அடிகள் சுத்தானந்த பாரதியார்
தென்னாட்டு வீரன் :
புத்தனேரி ரா. சுப்பிரமணியன்
ஒளிக் கற்கள் :
வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை
சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி :
வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை
செய்திகளும் குறிப்புக்களும் :

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 0

OFFICE OF THE REGISTRAR
21 APR 1943
MADRAS

7L
031 ma11,N46
N43.20.5
19966

திருநெல்வேலித் தென்னிந்திய
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்,
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. ,, துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. ,, டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

7. ,, காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், பி. ஏ.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

8. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை.

9. ,, வித்துவான் மு. இராசாக்கண்ணு அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், செயிண்ட் அன்னி உயர்பள்ளி, சென்னை.

10 ,, இளவழகனாரவர்கள், கழகத் தமிழ்ப் புலவர்

பவானந்தர் கழக வெளியீடுகள்

இறையனாரகப்பொருள் உரை	2	8
தொல். சொல்லதிகாரம்-நச்சினார்க்கினியர் உரை	3	0
வீரசோழியம் உரையுடன்	3	0
பொருளதிகாரம் நச்சினார்க்கினியம் பேராசிரியம் 4 பாகம்	6	0
யாப்பருங்கல விருத்தியுரை 2 பாகம்	3	8
தமிழ் இலக்கணத் தெளிவு	0	8
[illegible]	0	[illegible]

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

சர் R. K. சண்முகஞ் செட்டியார், K. C. I. E.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-உ0] சித்திரபானு—பங்குனி (1943) [பரல்-ரு

சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள்

உரை விருந்து

உரைவிருந்து என்னும்போதே உள்ளத்தில் மகிழ்ச்சி மீதூருகின்றது. அதினும், தமிழ்ப்பெருந் திருவினர் சர். ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களுடன் என்றால், அதினும் தமிழைப் பற்றி என்றால், கிளர்ச்சிக்கு என்ன குறை!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சென்னைக் கிளை நிலைய முகவர் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களும் யானுமாக 10-1-43-ல் திரு. செட்டியாரவர்கள் திருமாளிகைக்குச் செல்ல நேர்ந்தது. செட்டியார் நுங்கம்பாக்கம் மாளிகையில் தங்கி யிருந்தனர்.

நாங்கள் மாலை நான்கு மணிக்கு அவர்கள் மாளிகையை அடைந்தோம். முற்றத்தை அடைந்ததும், திரு. செட்டியா ரவர்கள், முகப்பு மண்டபத்திலிருந்து சற்று முன்வந்து, தம் நகை முகம் மலர்த்தி அன்புடன் நல்வரவு வழங்கினார்கள். நாங்கள் அவர்களைக் கண்டு அளவளாவுதல் விரும்பி முன்னமே அவர் கட்குத் தெரிவித்து அவர்கள் இசைவினைப் பெற்றிருந்தோமாயி னும், குறித்த நேரத்தில் அவர்கள் எங்களை எதிர்பார்த்து முகப்பு மண்டபத்தில் உலவிக்கொண்டிருந்த அருமையும் தமிழ் உரிமை யும் மிக்க மகிழ்ச்சி யளித்தன.

மூவரும் மண்டபத்தில் இனிய இருக்கைகளில் இருந்த னம். என் செவிப்புலனின் நிலை எனக்குத் திரு. செட்டியாரவர்

களின் அருகில் அமரும் உரிமையை வழங்கியது. எல்லாம் நன்மைக்கே என்னும் பொருளுரையின் ஓர் உண்மை எனக்கு அப்போது தெளிவாயிற்று.

செட்டியார் நீண்டு உயர்ந்த இனிய பொன்மேனியர். அன்று அவர், முற்றும் தூய வெண்ணிற ஆடை அணிந்திருந்தனர். இறையனாரகப்பொருளுரை முதலிய பழைய தமிழ் நூல்களில், 'வெண்ணிற ஆடை அறிவின் பெருமைக்கு அடையாளம்' என வருகின்ற குறிப்பு அப்போது நினைவுக்கு வந்தது.

அளவளாவி மகிழும் அன்புரைகள் கிளர்ச்சியோடு நிகழ லாயின. இடையே கழக முகவரவர்கள் தமிழின் வளர்ச்சி குறித்துப் பேச்செடுத்தனர். திரு. செட்டியாரவர்கள் உள்ளத் தில் தமிழைப்பற்றி விளங்கிக்கொண்டிருக்கும் நற்கருத்துக் களைத் தெரிந்துகொண்டு, அவற்றின்படி முயன்று தமிழ்க்குப் பயன்படுத்த வேண்டும் என்பது முகவரவர்கள் கருத்து. தக்கோர் பலரையும் அடைந்து அவர்களோடு அளவளாவி, அவர் கள் எண்ணங்களை அறிந்து தொகுத்து உலகுக்கு நலம் புரிவது ஒரு சிறந்த தொண்டுநெறியாகு மன்றோ! திரு. செட்டியார், தம் இயற்கை அறிவாற்றலால் இந்தியச் சார்பாளராய், ஜினிவா, இங்கிலாந்து, ஒட்டவா, ஆத்திரேலியா, அமெரிக்கா முதலிய பிற நாடுகட்குஞ் சென்று அங்கங்கும் பழகி நிலைகளறிந்த பெரு மகனாராதலாலும், எதொன்றையும் திறமையாக வாதிப்பதில் வல்லுநராதலாலும் இவர்கள் போன்றாரது கருத்துத் தமிழ் மக்கட்கு முதன்மையுமாகுமன்றோ! பேச்சுப் பின்வருமாறு நிகழ்ந்தன :

முகவர் : தமிழ் நூல்களை மக்கள் மிகுதியாகவும் செவ்வையாக வும் படிக்கும்படி செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி யெல்லாம் கழகம் நூல்களைப் பதிப்பிட்டுக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்றது.

சர். செட்டியார் : சங்க நூல்களை மக்கள் படித்துப் பெருமை அறியவேண்டும். படிக்கும்போதே சொல்லிலும் பொருளி லும் சிக்கலில்லாமல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும். சொற்களைச் சந்திபிரித்து அச்சிடலாம்.

சங்க நூல் என்றவுடன் எனக்கு மின் இயக்கம்போல் ஓர் உணர்ச்சி மேலிட்டு உடம்பெங்கும் பரவியது.

முக: முழுதும் சந்தி பிரித்தால் செய்யுளழகும் ஓசையினி மையும் சிதைந்துவிடுமே என்று நினைக்கவேண்டியிருக் கிறது.

சர்: அவைகளுக்கெல்லாம் வேறு பதிப்பு வைத்துக்கொள்ள லாம். நூல்களை எப்படியும் பலரும் படிக்கச் செய்வது முதன்மை. கருத்தை அறியச் செய்ய வேண்டுவது முதன்மை. அப்போது நூலின்மேல் மதிப்பும், வாழ்க்கை யில் திருத்தமும் மக்களுக்கு உண்டாகும்.

முக: கழகத்தில் பெரும்பாலும் இப்போது அச்சிட்டு வருகிற நூல்களில் கடின சந்திகளைப் பிரித்தே அச்சிட்டு வருகி றோம்.

நான்: குற்றியலுகரம் போன்ற சில சந்திகளைப் பிரிப்பது தான் இடராயிருக்கின்றது.

சர்: பொருள் விளக்கத்துக்குத் தடையில்லாமலிருந்தால், ஓசை யினிமைகளைச் சில இடங்களில் கருதலாம். மேலும், நூல் களை அச்சிடும்போது அந் நூல்களைப்பற்றி முன்னறிவாகத் தெரிந்துகொள்ளக் கூடிய குறிப்புக்களை, முதலில் எளிய உரைநடையில் கொடுத்திருக்க வேண்டும். நூலின் உட் பிரிவுகளிலும் அப்படியே தரவேண்டும்.

சிலப்பதிகாரத்தில் உள்ள 'மங்கல வாழ்த்துக் காதை'யை ஒருவர் படிக்க விரும்பினால், அந்தக் காதையின் முதலில், அதி லுள்ள கருத்துக்களையும் கவனிக்க வேண்டிய பகுதிகளையும் பற்றித் தொகுத்துச் சுருக்கமாக அச்சிட்டிருக்குமானால், அவ ருக்கு அது மிகவும் உதவியாயிருக்கும். செய்திகள் தெரியா மலே செய்யுளில் நுழைந்தால், ஆர்வம் தடைப்பட்டுக் குறைந்து போகிறது. எப்படி அச்சிட்டிருந்தால் நல்லது என்பதற்கு முன் மாதிரியாக நான் ஒன்று எழுதியிருக்கிறேன்.

என்று சொல்லித் 'தமிழ் வளர்ச்சி' என்னும் பொருளில் 'வசந்தம்' என்னும் இதழில் ஒரு சிலப்பதிகாரப் பகுதியை

எடுத்துத் தாம் விளக்கி எழுதியிருந்த கட்டுரையை அவர்கள் படித்துக் காட்டினார்கள்.

திரு. செட்டியாரவர்கள் என் காதுக்கும் நன்றாகக் கேட்கும்படி உரத்துப் படித்தார்கள். அந்த அருமையும் பெருமையும், நான் என்றும் மறக்க முடியாததா யிருக்கின்றது. எங்ஙனம் மறக்க முடியும்?

சர். செட்டியாரவர்கள் தமிழில் செய்தித் தாள்களுக்குக் கட்டுரைகளும் எழுதி உதவுகிறார்கள் என்று அறிந்தபோது, தமிழ் அடையவேண்டிய முன்னேற்றத்திற் பெரும்பகுதியை அடைந்துவிட்டதாகவே தோற்றிற்று. தமிழ் வளர்ச்சியைப் பற்றிய கவலையில் திரு. செட்டியாரவர்கள் தாமே பெரும் பங்கு எடுத்துக்கொண் டிருப்பதனால், அவர்கள் ஊக்கமும் அன்பும் இன்னும் நன்கு விளங்குகின்றன. நடையும் முறைகளும் அவர்கள் எழுத்தில் நன்றாக இருந்தன. எழுத்து, விளக்கமாகவும் சுருக்கமாகவும் உரமாகவும் இருந்தது. திரு. செட்டியாரவர்கள் பொருளாதாரத் துறையிற் சிறந்த தலைவர் என்பதும், சிக்கனத்தில் வல்லவர் என்பதும், அவர்கள் இந்திய அரசியல் நடுக் கழகத்திற் பல ஆண்டுகள் தலைவராகவும் உறுப்பினராகவும் விளங்கியிருந்து அரசியல் வரவு செலவுத் திட்டங்களை அவ்வியல்புகள் தோன்ற அமைத்து உதவியதிலிருந்து நன்கு அறிந்திருக்கின்றோம். அவர்கள் எழுத்திலும் அவ்வமைப்புச் சிறப்பாகக் காணப்பட்டது.

சர்: இன்னும், நூல்களில் வருகின்ற சில அமைப்புகட்கும் கருத்துகட்கும் தகுதியான ஆராய்ச்சிக் குறிப்புக்களும் காரணங்களும் நூலுள் அங்கங்கும் சேர்த்துத் தருவதும் நல்லது. படிப்பவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு சிக்கல் தீர்த்து எளிமை செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். தொல்காப்பியத்தில், அகத்திணையியலில், நிலங்களைப்பற்றி அழகான பாகுபாடு வருகின்றது. அதற்கு உரிய காரணமும் ஆராய்ச்சிக் குறிப்பும் அங்கே சேர்க்க வேண்டுவது முதன்மை.

முக: முதன்மைதான்; படிப்பவர்க்கு அது நல்ல விளக்கத்தைத் தருவதோடு கிளர்ச்சியையுங் கொடுக்கும். இளவழக

ஞர் 'அகத்திணையியல் விளக்கம்' என்று ஒரு நூல் இந் நோக்கத்தோடு பதிப்பித்திருக்கிறார்.

சர்: அதை நான் பார்க்கவேண்டும். ஆங்கிலத்தில் ஒரு நூலைப் பற்பல வகையாகப் பதித்திருக்கிறார்கள். எந்த நிலையில் உள்ளவர்களும் தமக்கு ஏற்ற பதிப்புக்களை வாங்கிப், பிறர் உதவியில்லாமலே படித்துக், கருத்தும் அழகும் அறிந்துகொள்ளுகிறார்கள். நாளடைவில் ஓரளவு புலமையும் அடைந்துவிடுகிறார்கள். தமிழில் அப்படியெல்லாம் நூல்கள் வரவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது.

முக: கழகம் அந்தப் பணியில் தலைசிறந்து வரவே முயன்று வருகின்றது. இன்னும், தமிழ் நூல்களை ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் வெளியிட்டுப் பிறநாட்டாரும் தமிழின் உயர்வை அறிந்து கொள்ளும்படி செய்ய எண்ணமா யிருக்கிறது.

சர்: நம் நாட்டாரை நாம் முதலில் செவ்வையாகப் படிக்கச் செய்வதற்கு வழிசெய்ய வேண்டும். தமிழ் மொழியிலுள்ள சொற்களுக்குச் சரியான பொருளும், நூல்களிலுள்ள உயர்ந்த கருத்துக்களும், நம்மவர்களில் எல்லா நிலையினரும் உள்ளுற அறிந்து மதித்து மகிழும்படி செய்துவிட்டால், நாம் சிறந்த வெற்றியுடையவர்களாக ஆவோம்.

இடையில் நான், புறநானூறு மாநாடு நடக்கவிருப்பது பற்றித் திரு. முகவரவர்கட்குச் சிறிது நினைப்பூட்டினேன்.

முக: சங்க நூல்கள்மேல் சில காலமாக மாநாடுகள் கூடி வருவதும் அதற்கு ஒரு வகையில் ஆக்கமாயிருக்கிறது. மாநாட்டு விரிவுரைகளை முன்பாகவே அச்சிட்டு மாநாட்டுக் காலத்திலேயே கழகம் வெளியிட்டு வருகிறது. நூலின் கருத்துக்களை விளக்கிப் பேசும் விரிவுரைகளாக அவை இருப்பதனால் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் அவை மிகவும் உதவியாயிருக்கின்றன.

சர்: அது நல்லதுதான். நூல்களாக வெளிவராத சொற்பொழிவுகளைக்கூட, அச் சொற்பொழிவுகள் நடக்கு முன்பே, அவற்றை முழுமையும் அச்சிடாமல், அவற்றின் அமைப்பும் பொருட் குறிப்புக்களும் தெரியும்படி சுருக்கமாக

அச்சிட்டு அவையோர்க்கு வழங்குதலும் நன்றாகும். முழுமையும் அச்சிட்டுத் தந்தால் சொற்பொழிவு கேட்பதில் வேட்கையிராது. என் சொற்பொழிவுகளை அச்சிட நேரும்போதும் இம் முறையையே நான் மேற்கொள்கின்றேன்.

முக: அண்மையில், புறநானூறு மாநாடும் நடத்தவேண்டுமென்று கழகம் தீர்மானித்திருக்கிறது. **திருவாளர் ரா. பி. சேதுப் பிள்ளை யவர்கள்** அன்று தலைவராக இருக்க இசைந்திருக்கிறார்கள். புலவர்கள் ஐவரேனும் அறுவரேனும் பல தலைப்புக்களின்மேற் பேசக்கூடும். தாங்கள் அன்று விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தால் நலமாயிருக்கும். மாநாட்டுத் திறப்புரையாகச் சில சொல்லித் திறப்புவிழாச் செய்யலாம்.

சர்: வருகிறேன். அப்படியே செய்வோம்.

தமிழ்ச் சொற்கள் சிலவற்றின் பொருட்காரணம்பற்றி, யானுஞ் சில நேரம் இடையிடையே பேசி வந்தேன்.

வெளியில், வேறு பெருமக்கள் சிலர் சர். செட்டியாரவர்களைப் பார்க்கும்பொருட்டு வந்திருந்தனர். அவர்களும் தாம் வருவது குறித்து முன்பே இசைவு பெற்றிருந்தனர்; ஆயினும் திரு. செட்டியாரவர்கள் தமிழன்பு, தமிழின் அளவளாவுதலை அவ்வளவு விரைவில் விடுவித்துக்கொள்ளவும் விரும்பவில்லை. 'சற்று வெளியில் அமருங்கள்' என்று வந்தவர்கட்குச் சொன்னார்கள். சிறந்த தமிழ்ப் பெருமகனாரோடு அளவளாவுதலில் நாங்களும் எல்லாவற்றையும் மறந்திருந்தோம். பின்பு, பிரியும் உள்ளமில்லாமலே அன்று நாங்கள் விடைபெற்றுக் கொள்ளவேண்டி யிருந்தது.

திரு சர். ஷண்முகஞ் செட்டியாரவர்கள் தமிழன்பு வெல்க!

—இளவழகன்.

"அகமும் புறமும்"

[திரு. வித்துவான் K. கோவிந்தன், திருவத்திபுரம்]

உலக வாழ்க்கை இரவும் பகலும் போன்று இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், செய்யத்தக்க செயல்களும் செய்யத் தகாதனவாய செயல்களும் நிறையப்பெற்றது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். அத்தகைய உலக வாழ்க்கையை மேற்கொண்ட மக்கள் பலரும், தாம்தாம் பெற்று நிற்கும் அறிவுநிலைக் கேற்ப, காட்சி வகையானும், கருத்து வகையானும் ஆய்ந்து ஆய்ந்து, இன்பமாவன இவை, துன்பமாவன இவை எனவும், நன்மையாவன இவை, தீமையாவன இவை எனவும், தக்கன இன்ன, தகாதன இன்ன எனவும் வகுத்து வகுத்துக் கூறிச் செல்வாராயினர். இவ்வாறு படைப்புக் காலம் தொடங்கி வாழ்ந்துவந்த மக்கள், தம் வாழ்க்கையில் கண்ட முடிபுகளைத் தம் பின்னுள்ளோர் எளிதில் உணர்ந்து உய்தற் பொருட்டு, தம் முன்னுள்ளோர் கண்ட முடிபுகளுடன் கூட்டித் தொகுத்துக் கூறிச் செல்வாராயினர். இவ்வாறு கூறப்பட்ட நெறியே அறநெறியாம். சுருங்கக்கூறின், முன்னோர் விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கியனவற்றைச் செய்யாமல் ஒழிதலும்ஆய இவ்விரண்டே அறநெறியாம்.

இவ்வறநெறி கடைப்பிடித்து வாழ்வான் துன்பத்தின் நீங்கிய இன்பத்தினையும், தீமையின் நீங்கிய நன்மையினையும் பெற்று வாழ்பவனாகின்றான். அவ்வாறு பெற்ற இன்பத்தினை அவன் என்றும் ஒருநிலைத்தாகப் பெற விரும்புதலும் இயல்பே. அவ்வறநெறி வாழ்வதாற் பெற்ற இன்பத்தினைச் சிறிது மிகைப்படுத்தித் தருவது, அவ்வறநெறியே ஈட்டிய பொருளாகும். இவ்வாறு அறிநெறி நின்று பெற்ற இன்பத்தினைப் பரந்த அளவில் தருவது பொருள் எனக் கண்டான், அப் பொருளினை முன்னோர் கூறிய அறநெறியே நின்று பெற்று வாழ்கின்றான். இவ்வாறு அறநெறி நின்றும், பொருள் ஈட்டியும் பெற்ற இன்பமும் என்றும் ஒரு நிலையில் இலதாய் நாள்தோறும் குறைவுறுவதைக் காணும் அவன், குறைவின்றி நிறைந்த ஓர் இன்பத்தினைப் பெற முயற்சித்து இறுதியில் அவ்வின்பத்தையும் பெற்று நிற்பன். அவ்வின்பத்தையே வீட்டின்பம் என்று நூல்கள் கூறுகின்

றன. இந்நெறி அறத்தால் பொருளும், பொருளால் இன்பமும், இன்பத்தால் வீடும் பெற விழைதலே மக்கள் தம் மனத்தின் இயல்பாம். இவ்வியல்பினின்றும் வேறுபடுவார் மக்கள் எனும் தகுதிப்பாட்டிற்கு உரியரல்லர். இவ்வறம், பொருள், இன்பம், வீடு ஆய இந் நாற்பொருளையே, நம் தமிழ் நாட்டினர், அகம், புறம் என இரண்டனுள் அடக்கிச் செல்வாராயினர். அகமாவது, மக்கள், என்றும் தம் உள்ளம் குறைவின்றி நிறைந்த இன்பக் கேணியில் திளைத்திருக்க வாழும் வாழ்க்கையாம். புறமாவது, அவ்வுள்ளம் அவ்வின்பக்கேணியில் படிந்து இருத்தற்கு உறு துணையாய பொருளினை அறவழியே ஈட்டுதற்கு மேற்கொள்ளும் முயற்சி வகைகளாம்.

இனி, மக்கள், அறம், புறம் ஆய இரண்டையும் ஒப்பக் கருதாது, புறத்தை மறந்து அகம் ஒன்றையே பற்றியோ, அன்றி, அகத்தை மறந்து புறம் ஒன்றையே பற்றியோ வாழ்வாராயின், அவர்கள் வாழ்க்கை பயனுடைய வாழ்க்கை யாகாது. மக்கள் அகத்தையும், புறத்தையும் ஒப்பக் கருதிப் பேணிவந்த பண்டைக் காலத்தே அவர்தம் வாழ்க்கை செம்மையுற்றிருந்தது. இடைக்காலத்தே மக்கள் அகம் ஒன்றையே கருதிப் புறத்தை மறந்தார்கள். ஆகவே அவர்கள் வாழ்க்கை நிலை கெடுவதாயிற்று. அவ்வாறு கெட்டவருள், சச்சந்தனும், சேரன்கணைக்கால் இரும்பொறையும் சேர்ந்தோராவர். முன்னோன், தன் மனைவிபால் பெறலாகும் காம இன்பம் ஒன்றையே பெரிதாக எண்ணிப் புற நிகழ்ச்சிகளை அறவே கைவிட்டு, அரச உரிமையையும் அமைச்சன் கட்டியங்காரன்பால் ஒப்படைத்து வாழ்ந்ததினால், அரசை இழந்து, இல்லாளை இழந்து, இறுதியில் உயிரையும் இழந்தான். பின்னோன் ஆயுந்தொறும் ஆயுந்தொறும் இன்பம் பயப்பதாய நூல்களை ஆராய்வதன் கண்ணேயே தனது முழுக் கருத்தையும் செலுத்தி, தனக்குரிய புற ஒழுக்கமாய நாடு காவலை நாடாது ஒழியவே, அவன் சோழன் செங்கணானால் சிறை செய்யப்பெற்று, சிறையிலேயே உண்ணவும் நீர் இன்றி, உயிரையும் இழந்தான்.

இவ்வாறு இடைக்காலத்தே மக்கள், அகம், புறம் ஆய இரண்டினையும் ஒப்பக் கருதாது, அகம் ஒன்றினையே பற்றி

வாழ்க்கையின் முழுப்பயனையும் எய்தாது கெட்டது போன்றே, இக்காலே, மேனுட்டினர், அகத்தை அறவே மறந்து புறத்திலேயே தம் நாட்டத்தைச் செலுத்திக் கெட்டொழிவதைக் காணும் நாம், அகம், புறம் ஆய இவற்றின் ஒன்றினிடத்தே மட்டில் உளத்தைச் செலுத்தாது, நம் பண்டை முன்னேர் போன்று அகத்தையும் புறத்தையும் ஒப்பக் கருதி வாழ்ந்து உயர் நிலே பெறுவோமாக.

இனி, பண்டையோர் அகத்தையும், புறத்தையும் ஒப்பக் கருதி வாழ்ந்த உயர்வுடையோராவர் என்பதற்கு ஒரு சில சான்றுகளைக் காட்டி இக் கட்டுரையினை முடிக்கின்ரும்; ஒரு வினையைச் செய்து முடித்தல் வேண்டும் எனத் தொடங்குவான் ஒருவன் அதை இடையில் மடங்காது செய்து முடிக்க விரும்புவானயின், அவ் வினையைத் தொடங்குவதற்குமுன், அவனல் எண்ணித் துணியப்பட வேண்டுவன பலவாம். முதற்கண் தான் செய்யத் தொடங்கிய வினை பழியொடு படராப் பண்புடைய வினைதான என்று நோக்குதல் வேண்டும். பின்னர் அவ்வினையைச் செய்யுழி உளவாம் அழிவுப்பொருளின் அளவினையும், அவ் வினை முட்டின்றி முடிந்தால் உளவாம் ஆக்கப் பொருளின் அவாவினையும் சீர்தூக்கிப் பார்த்து, அழிவுப் பொருளினும், ஆக்கப்பொருள் மிக்கிருப்பின் அவ்வினையைச் செய்யத் துணிதல் வேண்டும். பிறகு, அவ்வினையினது வலியையும், "நல்ல காரியத்திற்கு நானூறு இடையூறு" என்பவாகலின் அவ்வினையைச் செய்ய ஒட்டாமல் தடை செய்வார்தம் வலியையும் ஒருபால் நிறுத்தி, அவ் வினையைச் செய்யும் தன் வலியையும், தனக்குத் துணையாவார்தம் வலியையும் வேறு ஒருபால் நிறுத்தி ஒப்பு நோக்கி, முன்னிரண்டு வலியைக் காட்டிலும், பின் இரண்டு வலி மிக்கிருப்பின் அவ்வினையைச் செய்யத் தொடங்குதல் வேண்டும். தொடங்குங்கால், அவ் வினை முட்டு இன்றி முடிதற்காம் காலத்தையும் இடத்தையும் தேர்ந்துகொண்டு, அஞ்சாமை, ஊக்கம் முதலிய குணங்களுடன் செய்யத் தொடங்கி, இடையே இடுக்கண்கள் பல அடுக்கிவரினும் அவை கண்டு அஞ்சாது, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துயிலாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி

அருமையும் பாராது, அவமதிப்பும் கொள்ளாது, கருமமே கண்ணாய் இருந்து அவ்வினையைச் செய்து முடித்தல் வேண்டும். இவ்வாறு பேரிடர்ப்பாட்டினுக் கிடையே அவ் வினையைச் செய்து முடித்தான், அவ் வினையாலாம் பயனைப் பெறுங்கால், அவன் உள்ளம் கொள்ளும் இன்பத்திற்கு எல்லையும் கூறமுடியுமா? இவ்வாறு புறத்தே தொழிலாற்றிப் பெற்ற இவ்வின்பத்தினை ஒரு புலவன் "வினைமுடித்தன்ன இனியோள்" (நற்றிணை, 3) என அக இன்பமாகிய பெண் இன்பத்திற்கு ஒப்பிட்டுக் கூறுவானாயின், அக்கால மக்கள் உள்ளம், அக இன்பத்தையும், புற இன்பத்தையும் ஒப்பக் கருதி வந்தன என்பது தெள்ளிதிற் புலனாம் அன்றே?

மேலும், "ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய இன்பம்" எனவும், "சுவை பல என்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே" எனவும் பாராட்டிப் பேசப்பெறும் இன்பத்தை அளிப்பாராகிய பெண்களை, புற இன்பம் பெறும் எண்ணத்துடன் வினையாற்றுவார் அவ் வினைக்கிடையே நினைத்தலும் கூடாது என்பார் "கிழவிநிலையே வினையிடத்துரையார்" என்று கூறி, அவ் வினையை முற்றுப்பெற முடித்து அவ் வினையாலாம் முழுப்பயனையும் நுகருங்கால், பெண் இன்பம் தம்மை யறியாதே தம் மனத்திடைத் தோன்றி நிற்கும் என்பார் "வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" என்றும் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார் அவர்களின் சொல்லே பண்டையோர் அக இன்பத்தையும், புற இன்பத்தையும் ஒப்பக் கருதிய உயர்பேராளர் ஆவர் என்பதைக் குன்றிடை விளக்கென நின்று காட்டுகின்றது. மேலும், சான்று பல காட்டிச் செல்வேமாயின் கட்டுரை விரியுமென்றஞ்சி இம்மட்டில் முடிக்கின்றோம்.

காலை மலர்ச்சி!

[புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்]

1. வெள்ளி விடிவதைக் காணுதடி—வானம்
வெண்மை வரவரத் தோணுதடி
புள்ளினங்கள் கூட்டை நீங்குதடி—வண்டு
பூக்களில் தேனுண்ண ஏங்குதடி.

2. சின்னக் குயிலிசை பாடுதடி—காற்றில்
சேர்ந்து மரக்கிளை யாடுதடி
தென்னை பனைக ளசையுதடி—அணில்
தேமாங் கனியைப் பிசையுதடி.

3. காக்கைக ளினத்தைக் கூவுதடி—பசுங்
கன்றுகள் தாயிடந் தாவுதடி
சீக்கிரம் பாலைக் கறந்திடவே—ஆயர்
சென்று தொழுவைத் திறந்தாரடி.

4. நந்த வனத்தினிற் பூக்களிலே—இதழ்
நாள்மலர் பூக்க விரிந்ததடி
சிந்தை குளிர்ந்தவை கொய்தாரடி—மக்கள்
சேர்த்தழ காய்மாலை செய்தாரடி.

5. பாரடி காளைகள் ஓட்டிக்கொண்டு—ஏழைப்
பள்ளர்கள் பாடல்கள் மீட்டிக்கொண்டு
ஏரினால் உழுது பண்படுத்த—வயல்
ஏகிடும் பான்மையைக் காண்பாயடி.

6. சின்னஞ் சிறுவர்கள் கூடிக்கொண்டு—தனிச்
சிங்கார மாய்விளை யாடிக்கொண்டு
பொன்னி நதிதனில் நீராடக்—களி
பொங்கிக் குதிப்பதைப் பாராயடி.

7. நீலக் கயல்விழி மாதரெல்லாம்—நல்ல
நித்திரை நீங்கி வாயில்தெளித்துக்
கோலங்க ளிட்டெழில் நின்றாரடி—பின்னர்க்
கூடிக் குளித்திடச் சென்றாரடி.

8. அன்ன நடையிற் கை வீசிக்கொண்டு—பெண்கள்
ஆற்றுக்குச் செல்லும் விரைவினிலே
பின்னே அழுதிகை வண்டியுடன்—வரும்
பிள்ளையைக் கூட நினைப்பதில்லை.

9. ஆற்றுநீர் செல்லும் அமைதியிலே—மீன்கள்
அங்குமிங்குந் துள்ளி யாடுமடி!
காற்றலை தள்ளக் குளிப்பவர்கள்—தள்ளும்
கையலை கள்பல தோன்றுமடி!

10. கங்குல் இரவுங் கழிந்ததடி!—நல்
காலை மலரும் மலர்ந்ததடி!
எங்கும் உணர்ச்சி பிறந்ததடி!—காட்டில்
பொங்கும் மகிழ்ச்சி சிறந்ததடி!

திருவாரூர்ப் பள்ளு

[வித்துவான் திருவாட்டி சிவ. பார்வதியம்மையார்]

13-11-42-ல் திருச்சி வானொலியில் பேசியது.

(முன் கஙு0-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும், நம் முன்னோர்கள் உணவிற்கு ஆதாரமான உழவு தொழிலை மிக மதித்துள்ளார்கள் என்பதற்குச் சிந்தாமணி முதலாகவுள்ள செந்தமிழ்க் காப்பியங்கள் பலவற்றிலும் நாட்டுப் படலம் என ஓர் பிரிவை வகுத்துக்கொண்டு, அதில் ஆற்றில் நீர் பெருகி வருவதும், வயல்களில் நீரைப் பாய்ச்சுவதும், உழுவதும், விதை தெளிப்பதும், நாற்று நடுவதும், களை பறிப்பதும், கதிர் அறுப்பதும் முதலிய செய்கைகளைப் புனைந்துரைப்பதே சான்றாகும். திருவாரூர்ப் பள்ளில் பண்ணைத் தலைவன், வன்மீகப் பள்ளன், வன்மீகப்பள்ளி, சீரங்கப்பள்ளி யென்போர் நாடகப் பாத்திரங்களாகவுள்ளனர். சதாசிவ மூர்த்தி பண்ணைத் தலைவன் அல்லது ஆண்டையாகவும், மகேசுரன் பள்ளனாகவும், இருசத்திகள் பள்ளிகளாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது என்று கூறுவர். இதில் மழை நீர் பெருகி ஐந்திணைகளிற் செல்லுதல், மணிமுத்தாறு பெருகி வருதல், பண்ணைத் தலைவன் வருகை, அவன் பள்ளனைப் பண்ணைச் செயல் வினவுதல், பள்ளன் அதனையும், எருத்துமாடு, ஏர்க்கால், மேழி, கொழு, நெல்லின் வகை என்பவற்றையும் எடுத்துரைத்தல், பண்ணைக்காரன் பள்ளனை விதை தெளிக்கச் சொல்லல், நடவு நடப் பள்ளத்திகளை யழைத்தல், பள்ளத்திகள் ஒருவரை யொருவர் ஏசுதல், என்னும் இவை முதலாயின அழகாகவும், நகைச்சுவை தோன்றவும் கூறப்பட்டுள்ளன. இதில் வெண்பா, கலித்துறை, விருத்தம் முதலியவற்றுடன் சந்தப் பாக்களும் அமைந்துள்ளன.

இந் நூலிலே குறிஞ்சியில் பெய்த மழைநீர் முறையே ஐந்திணைக் கருப்பொருள்களை வாரிக்கொண்டு செல்லுதல் கூறுமிடத்து முல்லை நிலத்திற் செல்லுதல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது :

புரண்டு முல்லை நிலத்திற் புகுந்து பொதுவர் மனையில் கதுவியே
பதிய நெய்யும் பழைய தயிரும் பொருந்து பாலு மருந்தியே

கரந்தை யணியும் பரந்த சடையர் கமலைத் தியாகர் விடையைப்போல்
கன்ன மேகொடு வெள்ள மேவிய கான வாரண மோடவே
துரந்து பயிலும் உழையும் முயலு மொழிந்து திரையி லழுந்தவே
தோன்றிக் குருந்துந் தான்றி யடகுஞ் சுழியி லிடையி லுழலவே
பருந்தி ராசன் பொருந்து முபய பதங்கள் கருதி வணங்கியே
பரிந்த துளவும் செருந்து மீதினில் பரந்து மருதங் கலந்ததே.

மற்றும்,

'வாளை இருக்கை சுறவு தொழுத்தை வஞ்ச னம்சிறு மஞ்சனம்,
மடவை புல்லம் அயிரை கெளிறு மகரம் குறவை மலங்குமீன்,
தேளி யுழுவை மயறு சன்னை திமிதி மிங்கிலம் பலபுரவிமீன்,
சீனி கைத்தலை யானை மீனொடு தெள்ளி ருல்வாளை வெள்ளிருல்'

முதலிய மீன் வகைகளும்;

'முட்டிக் காலன் வெட்டுக்கிடா முட்டக் கருப்பன் மோழைக் காளை வீணைக் கொம்பன் ஆனைச் சொரியன் மட்டக் கொம்பன் நெட்டைக்காலன் வட்டக்குறியன்' என இவை முதலாக மாட்டின் பெயர்களும்; 'அரிய நாயகன் குறுவை பொற்காலி அருச்சுனன் தியாதானுணங்கு திருவரங்கன் அழகிய வாணன் தில்லைநாயகன் சீரகச்சம்பா' முதலிய நெல் வகைகளும் கூறப்பட்டிருப்பன ஆசிரியரின் பரந்த உலகியல் அறிவைப் புலப்படுத்தி இன்பம் விளைப்பனவாகும்.

பண்ணைத் தலைவனைப் பள்ளிகள் கண்டு,

'குறுத்தமெய் யழகரே கும்பிடுகிறேன்
கொழுக்கட்டை மூக்கரே கும்பிடுகிறேன்
சொறித்தலை யழகரே கும்பிடுகிறேன்
கூனும்சோணி வயிற்றரே கும்பிடுகிறேன்
பறித்தகண் ணழகரே கும்பிடுகிறேன்
ஊசிப்பாசிப்பல் லழகரே கும்பிடுகிறேன்
அறுத்தகா தழகரே கும்பிடுகிறேன்
பண்ணையாண்டவரே ஆண்டவரே கும்பிடுகிறேன்.'

என்று கூறிப் பாராட்டி வணங்கினர்களாம். ஆகா! பண்ணைத் தலைவனுடைய அழகே அழகு.

இவ்வாறே நகைச்சுவை தோன்றக் கூறியிருப்பவற்றில் பள்ளன் பண்ணைச் செயல் விளம்புதலும் ஒன்று:

'இளவிதைகார் பாசான விதையில்
எலியருந்தியது தொண்ணூறு கோட்டை
வளவிலே யிட்ட பட்டடையில்
பட்டிமாடு தின்றதெழுநூறு கோட்டை
அளவுவாசி யறுநூறு கோட்டை
யந்துதின்றதோ ரைந்நூறு கோட்டை
களவுபோனது நானூறு கோட்டை
கண்டகோட்டையும் முந்நூறே யாண்டே.'

என்பது காண்க.

மற்று, இப் பிரபந்தத்தில் பள்ளன் மனைவியருள் மூத்தாளாகிய வன்மீகப் பள்ளியும், இளையாளாகிய சீரங்கப்பள்ளியும் ஒருவரையொருவர் ஏசிக்கொள்வதே முதன்மையான பகுதி. மூத்தாள் சீரங்கப்பள்ளியின் ஆண்டையாகிய திருமாலையும் இளையாள் வன்மீகப்பள்ளியின் ஆண்டையாகிய சிவபெருமானையும் அவர்கள் செய்த செயலெல்லாம் தகாதனவாகக் கூறி இகழ்வதே பள்ளிகளின் ஏசலாகும். அவையெல்லாம் பழிப்பது போற் புகழும் புகழாகப் புகழ்ச்சியணியின்பாற்படும். அவ்வேசலிலே சிலவற்றைக் காண்போமாக.

'அந்தமுடனன்றரசரைவ ரேவவே
அன்று தூது சென்றானுங்கள்
ஆண்டை யல்லோடி.
சுந்தரன் விடுத்தபோ தந்த விரவில்
தூது சென்றானுங்களுடைச்
சோதி யல்லோடி.
மட்டுப்படாத் துட்டத் தனம் செய்த சோதைதன
மத்தடி யுண்டா னுங்கள்
கத்த னல்லோடி.
பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன் கையாற்
பிரம்படி பட்டா னுங்கள்
பிரா னல்லோடி.
ஆட்டுக் காலுக் காசை யாகிக் கோட்டுப்பனறியாய்
அன்று தேடிச் சென்றானுங்க
ளாண்டை யல்லோடி.

மோட்டுப் பன்றி யாயன்று குட்டிதனக்கு
முலையுங்கொடுத் தானுங்கள்
முத்த னல்லோடி.'

என்று இவ்வாறு ஏசிவிட்டுத் தத்தம் ஆண்டையின் பெருமையைக் குறித்து 'முடிகவித்து விபீடணர்க்கன்றரசாள ழூதிலங்கை கொடுத்தானெங்க ளாண்டையல்லோ, முடிவிலா மறைவனந் தன்னிலெலிக்கு மூவுலகீந்தானென் ஞண்டையல்லோடி' என்று இங்ஙனம் புகழ்கின்றனர். பின்பு 'கேசவனை யேசுவ திங்கேது சொல்லடி கிட்டிப்பார்க்கி லவர்க்கவ ரிட்டமல்லோடி, ஈசனை யேசுவதிங் கேது சொல்லடி யிருவர்க்குமுற வன்றிப் பகையுமுண்டோ' என்றும் ;

'மறந்திடா யென்பிழையை யன்பு கூறவே
வன்ம மாக எண்ணு தேநீ வன்மீ கப்பள்ளி
சிறந்துநா மிருவருங் கூடி யாடியே
சேர்ந்து வாழ வேணுங் காணுஞ் சீரங் கப்பள்ளி.'

என்றும் கூறி ஒற்றுமையாகிவிடுகின்றனர். மேலே காட்டியவற்றுள் 'ஆட்டுக்காலுக்கு ஆசையாகி' என்றது பொன்னம்பலத்தில் ஆடுகின்ற திருவடியைக் காண்டற்கு விரும்பி என்றபடியாம்.

இந்நூலாசிரியர் இங்ஙனம் பள்ளிகளின் ஏசல் வாயிலாகச் சிவபிரான் பெருமைகளையும் திருமாலின் பெருமைகளையும் உணர்த்திச் சைவத்தையும் வைணவத்தையும் சமரசப்படுத்தி முடித்திருக்கும் திறம் பாராட்டற்குரியது. இவ்வாசிரியர் சிறுத்தொண்ட நாயனார், அமர்நீதி நாயனார், இயற்பகை நாயனார் முதலியவர்கள் வரலாற்றையும், சிவபிரான் சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவை நாச்சியார் வீட்டுக்கு இரவிலே பாதஞ் சிவக்கத் தூது சென்றது, திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரிலே என்பைப் பூம்பாவையாகச் செய்தது, மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நரியைப் பரியாக்கியது, பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியன் கையாற் பிரம்படிபட்டது முதலிய செய்திகளையும் கூறியிருப்பது சிவனடியார்கள் வரலாற்றில் இவருக்குள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்துவதாகும். மற்றும் காமனை யெரித்தது, தக்கன் வேள்வியை அழித்தது, சிவ புண்ணியத்தால்

எலியை மாவலியாக்கி மூவுலகாட்சியளித்தது முதலிய சிவ புராணக் கதைகளும் இதில் வந்துள்ளன. அவ்வாறே திருமால் கிருட்டிணுவதாரத்தில் நிகழ்த்திய பல விளையாடல்களும், இரா மாவதாரச் செய்திகளும் பிறவும் கூறப்பட்டுள்ளன. 'தனித்தேறு செந்தமிழைக் கொண்டவரசர் தக்கபுகழ்போல் நாற்றுஞ் சமைந்த திப்போ' என்று தமிழ் வளர்க்கும் அரசர் புகழைப் பாராட்டியிருப்பதும், 'சிவகாரியந்தனக்கு அகிதங்கள் செய்யு மவர் தீ நரகில் வீழவே கூவாய் குயிலே' என்று சிவகாரியத் திற்கு அழிவு செய்வோரை மிக வெறுத்துரைத்திருப்பதும் சிந்திக்கற்பாலன. தியாகேசர் கனகதண்டில் அசைந்தாடும் அழகை,

'மங்கை யாடக் குடிலச் சடில மருவு தாள மாடவே
மார்பிற் செங்கழு நீரிற் பைந்தொடை மணிப்பொற் றேடு மாடவே
கங்கை யாடத் திங்க ளாடக் கனக தண்டினி லாடுவார்
கமலை வாழும் அமலர் மேவு கயலு லாவும் வயலுளே'

எனப் பாட்டின் சந்தத்தாலும் புலப்படுத்தியிருப்பது இன்பம் விளைப்பதாகும்.

தனித்தமிழ்க் கீர்த்தனைகள்

['நமது சென்ம பூமி' என்னும் முறை]

நம்முயிர்த் தமிழ் மொழி
நம்முயிர்த் தமிழ் மொழி
நம்முயிர்த் தமிழ் மொழி (நம்)

தேனும் பாலும் கலந்த பாகின்
தெளிவு தன்னின் இனிக்குமே
வானம் சுருங்க வளர்ந்த தாகும் (நம்)

அன்பும் அருளும் இன்ன என்று
அறிஞருக்கும் தந்தது
என்புருக்கும் இசையைப் பெற்ற (நம்)

உலகம் தோன்றும் நாளின்முன்னர்
உலவிநின்ற செம்மொழி
கலைகள் பலவும் கவினநின்ற (நம்)

கடவுள் கண்ட தன்பர் விண்ட
தளவிலாத உலகினர்
மடமை ஒழிக்கத் துணைகொடுக்கும். (நம்)

—வித்துவான் மு. இராசாக்கண்ணனார், B.O.L.

குண்டலகேசி அகவல்*

[அடிகள் சுத்தானந்த பாரதியார்]

தமிழில் ஐம்பெருங்காப்பியம் இருப்பதாகப் பெருமை கொள்கிறோம். அவற்றுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய மூன்றே உருப்படியாக உள்ளன. வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரண்டும் மறைந்தன. அவற்றினின்று சில செய்யுட்களே அங்குமிங்கும் நமக்குக் கிடைத்துள்ளன. வளையாபதியிலிருந்து 100 பாட்டுக் கிடைத்துள்ளன. குண்டலகேசி விருத்தங்களில் பத்தொன்பதே கிடைத்துள்ளன.

குண்டலகேசி சூளாமணிபோன்ற இனிய மாகவி. அதை வீரசோழியம் "அகல கவி" என்னும். அது பௌத்த சமயச் சார்பானது. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும் விளக்குவது. நீலகேசியில் இக் காவியக் குறிப்புகள் உள்ளன. அவற்றால் ஒருவாறு கதையை ஊகிக்க முடிகிறது. நீண்டகாலம் இதன் காப்புச்செய்யுளே நமக்கு மிச்சமிருந்தது. அண்மையில் புலவர் ஆராய்ச்சியால் பதினெட்டுச் செய்யுட்கள் கிடைத்தன.

அவற்றுள் இரண்டை இங்கே தருகிறேன். காவியத்தின் சுவையைப் பாருங்கள்.

முன்றான், பெருமைக்கண் நின்றான்; முடிவெய்து காறு
நன்றே நினைந்தான்; குணமே மொழிந்தான்; தனக்கென்று
ஒன்றேனு மில்லான்; பிறர்க்கே உறுதிக் குழந்தான்;
அன்றே இறைவன்; அவன்றாள் சரணங்க ளன்றே.

இறைவன் என வணங்கத்தக்கவன் பெருமைகளையும் தன்மைகளையும் இச் செய்யுள் விளக்குகிறது. இறுதிமட்டும் நலமே புரிதல், நலமே நினைத்தல், எல்லாருக்கும் இனிதாகும் நற்குணங்களையே மொழிதல், தனக்கென்று எதுவும் இல்லாமை, அகப்புறப்பற்றின்மை, பிறர் நலத்திற்கே பாடுபடுதல், ஆகியவையே

---

*இந்நூல் விரைவில் திருத்தமாக அன்பு நிலையத்திலிருந்து வெளிவரும்.

இறைவன் அருட்பெருமையாகும். அப் பெருமை சான்ற முதல்வனைச் சரண்புகுந்து வணங்கும் மாந்தர் அறநெறி நின்று அருளோங்கி நலம்பெறுவார்கள். இது காப்புச் செய்யுள்.

பாலையாந் தன்மை செத்தும், பாலனாந் தன்மை செத்தும்,
காளையார் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பும் இன்னே மேல்வரு மூப்பு மாகி,
நாளுநாம் சாகின் றேமால் நமக்குநாம் அழாத தேனோ?

மனிதன் ஒவ்வொரு பருவத்திலும் செத்து முதிர்ந்து, ஒவ்வொரு நாளும் சாகிறான். உடலின் நிலையாமை அவ்வாறிருப்பதால், பிறர் சாகும்போது அழுவதினும், நாமே தினஞ் சாவதைக் கண்டு வருந்தி முத்திமார்க்கத்தை அடைவது நலம்.

இக் கருத்துக்களையே பொருளாகக் கொண்ட இக் கவியிற் பொதிந்த கதையை அகவலாகச் சுருக்கிச் சொல்லுகிறேன். குண்டலகேசி என்னும் பெயரால் சில தொடர்பான கதைவரிகளாவது விளங்கவேண்டும். அந்தப் பெயர் காலச் சுழலில் மறைந்து போகக் கூடாது என்பதே இம் முயற்சியின் கருத்து.

குண்டலகேசி

௧. கனிவார் முகமுங், கருணை விழியும்,
அருளார் மனமும், அன்புச் சொல்லும்,
பிறர்க்கே வாழும் பெருந்தகை வாழ்வும்,
அறமார் பணியும், அணிந்த பகவன்,
மாசறு காட்சி மன்னன்,
சேவடிக் கமலஞ் சிந்தைசெய் வோமே!

௨. அவனருட் பெருமை அறியச் சொல்லும்,
பழந்தமிழ்ப் புலவர் பாடிய குண்டல
கேசி யென்னும் தேசுறு மாகதை,
ஐம்பெருங் காப்பிய மதனுளே ஒன்றாம்.
ஆயினும்,
பெயரள வினிலே உயிர்வைத் துள்ளது.
சூளா மணிபோற் சொற்சுவை மிக்கதாம்
'அகலக் காவியம்' அதிற்பத் தொன்பதே
பாட்டு நமக்குப் பாக்கி யுள்ளது.

கவிதை போயினும் கதையினை யேனும்
தமிழர் அறியச் சாற்றிடு வேனே.

௩. சீர்த்தி யோங்குந் திருநக ரதிலே,
கல்வியும் வாணிபச் செல்வமுஞ் செழித்து
வாழ்ந்தான் இசைபெறு **வாணிக மணியே.**
அன்னவன் பெற்ற மின்னிடை யன்னம்,
மதிவளர் முகத்தாள், மலர்தரு விழியாள்,
அமுதம் பொழியுங் குமுத வாயாள்,
புயலும் புகையும் போலச் சுருண்ட
கூந்த லழகி, **குண்டல கேசி**
என்னும் ***பத்திரை,** பதுமினி
சித்திரத் தெழுதொணுத் திருவுடை மாதே...

௪. பருவ மடைந்த திருமா தொருநாள்,
கொஞ்சுங் கிளிபோற் கூவுங் குயில்போல்,
தோகை மயில்போல் தோழிய ருடனே
மாடத் தின்மேல் ஆடித் திரிந்தாள்.

௫. அத்ததி தெருவில் அரசன் காவலர்,
திருட ஞெருவனைச் சிறைப்பிடித் தேகினர் ;
பார்த்தாள் பெண்மணி பதைப தைத்தாள் ;
" எழிலார் வாலிபன், இளந்திரு வுடையாான்,
என்மனம் விரும்பு மன்மதன் இவனே ;
இவனே கள்வன்...இவனென் காதலன் !"
என்று திகைத்து நின்ரு ளாங்கே !
காளன் என்னும் காளையக் கள்வன்
அரசருக் கினிய அமைச்சன் புதல்வன்.
பௌத்த சமயம் புகுந்தும் பயின்றும்,
அடங்கா மனத்தால் அறம்பி ழைத்தான்
சிறையிட் டிவனைச் சிரம்வாங் கிடவே
வேந்தன் பணித்தான்...வினைப்பய னென்னே !
கோவின் காவலர் கொண்டுசென் ருரே.

௬. காத லாலே கலங்கிய, நங்கை,
உடல்வெ ளுத்தாள், உள்ளஞ் சோர்ந்தாள்,
தவலமாட் டாத நோய்கொண் டயர்ந்தாள்.

* பத்திரை என்பதே அவள் இயற்பெயர்.

கண்ணைக் கவர்ந்த கள்வனைத் தவிர
வேறு நினைப்பெலாம் வீணென மறந்தாள்.
காதலன் விடுதலை காண வேண்டிப்
போதி நாதனைப் பூசனை செய்தாள்.
பெற்றோர் திருமணம் பேசும் போதெலாம்,
"மனத்திற் கிசைந்த மணாளன் ஒருவனே,
அவனை யன்றி யெவனையும் பாரேன்"
என்றுதன் உள்ளம் நன்றெடுத் துரைத்தாள்.

எ. மந்திரி முயன்றான் ; மாசறு தந்தையும்,
அரசனை வேண்டினான் ; ஆண்டவன் கருணையால்,
காளன் விடுதலை கண்டான்...கண்டு
கன்னி மகிழ்ந்தாள்...கடிமணம் புரிந்தாள்.
செல்வம் பெருகிய செட்டி மகிழ்ந்தே,
எனதிளஞ் செல்வர் இனிதுவாழ் கென்றே
இல்லந் தந்தான் செல்வந் தந்தான்...
கவலை யற்றுக் காதலர் நாளும்
புதுப்புது போகம் புசித்தனர் ஆங்கே.
உலகை மறந்தார், உடலுக் கினிய
சுகமே சுகமெனச் சொக்கிப் போனார்.
இருவரும் அன்பால் ஒருவரே யானார்.
கணப்பொழு தேனும் இணைபிரி யாமல்,
கரையிலாக் காமக் கடலிற் குளித்தார்.

அ. துய்த்துக் காமந் துடைப்போ மென்னல்,
அனலை நெய்யால் அணைப்பது போலாம்.
நினைவறப் புணர்ந்ததை நீக்குவோ மென்பார்,
புனலாற் புனலின் போக்கணைப் பவரே.
வேல்விழி தாக்கத் தோல்வியுற் றிணங்கிக்
காமத் தீயில் வேமிம் மாந்தர்,
எத்தனை போகம் துய்த்து மென்னே...!
அவர்நுக ரின்பம் அரைநொடி யின்பமே ;
நில்லா யாக்கை நிகரவே யதன்பால்,
ஊறுங் காமமும் வேறுபா டுறுமே...
மாந்தர் ஆசை மண்டல மதனில்,
விருப்பும் வெறுப்பும், விழைவுஞ் சோர்வும
இனிப்புங் கசப்பும், எரிப்புங் குளிரும்,

அலைகளைப் போலே ஆடிப் புரளும்...
இன்றுநே சித்தவர் இன்னொரு நாளே,
கொடும்பகை கொதிக்குங் கூற்று வாரே...

கேசியுங் காளனு நேசித் திருந்த
வாழ்விற் கலக்கம் வந்ததும் விந்தையோ?
கூடலே யுவந்து நீடிய காதல்,
கூடல் சுருங்கி ஊடல் பெருகவே,
ஊடலி னுடே உரைகள் வளரவே,
உரைக ளுடனே குறைகள் கூறவே,
பேச்சுத் தடிக்கவே, பெண்ணணங் கொருநாள்,
"ஒழுக்க மென்னும் உயர்நல முடைய,
செல்வன் அருமைச் செல்வி யானே...
நீயோ ஒழுக்க நிலைகெட் டலைந்து,
கடுஞ்சிறை வருந்திய கள்வனென் றாளே...
நானுன் கணவன் நீயென் மனைவி
என்னையா கள்வன் என்றனை...பெண்ணே
பாதகி உன்னைப் பழிவாங் குகிறேன்...
என்றுட் சினத்தால் எரிமனக் காளன்,
போலிச் சிரிப்பாற் பொழுதைப் போக்கிக்
காலம் பார்த்துக் கண்விழித் தானே.

உட்பகை கொண்ட வுறவெத் தனைநாள்!
உதட்டு நேயமும், உட்சின முறுவலும்,
புழுவளை துளைத்த பழமெனப் போமே.
காளன் ஒருநாள் "கனியிளம் பாவாய்,
செல்வச் சீமான் செல்வினீ யின்றுன்
அணிமணி வரிசையாய் அணிந்து மற்றோர்
அரம்பைபோல் என்னுடன் அழகாய் வா,வா,"
என்றனன் ஆங்கே சென்றனள் பேதை...
காளனும் சரிகை கட்டித் தன்னை
மாரவேள் போலவள் மதித்திட நின்றான்.
குண்டல கேசியிள கோமள வனப்பைக்
கண்டு கள்ளக் களிநகை பூத்து...
"கண்ணே, அழகுக் கரும்பே, உத்தமப்
பெண்ணே, எனது பெருமட மானே,
துயர்ச்சிறை நீங்கித் தூக்கு மேடையைத்

தப்பினேன் போதி யப்பன் அருளால்...
ஆதலால் இன்றே அவனை வணங்கிப்
படையல் வைக்கப் பருவதச் சிகரம்
ஏறிச் செல்வோம் ; என்னுடன் வா"வெனக்
கூட்டிச் சென்றான், குலமகள் சென்றாள்.

கக. மலைமுடி மேலே, மணாளர் சென்றதும்,
சிலைபோற் சற்றே சிந்தனை செய்து,
காதலன் முகத்திற் கடுமை காட்டி,
" கள்ளி நீயெனைக் **கள்வன்** என்றாய்...;
ஆம்யான் கள்வன் ; அழகுச் செருக்கி...
மண்டைக் கருவங் கொண்ட பேதையே,
கள்வன் இன்றுனைக் கொன்னை யடித்துக்
கொல்லப் போகிறான் கொடுமனக் கசடீ !
என்றான்.
தீப்பொறி பறக்குஞ் சினக்கண் உருட்டி
நிற்குங் கணவனைப் பொற்கொடி பார்த்தாள்...
சற்றே கலங்கிச் சங்கடப் பட்டாள் ;
பிறகுதன் னுள்ளே பேசிக் கொண்டே,
" கணவனைப் பணிதலே கற்பிற் கழகாம்.
தேவரீர் செய்க திருவுளம்...ஆனால்
என்னைக் கொல்லுமுன், இன்னிய கணவரே,
தம்மை மூன்று தடவை சுற்றி
வணங்கி நிற்கும் வரந்தர வேண்டும் "
என்றலுங் கள்வன் இணங்கினான் ; அந்தக்
கள்ளியும் வலம்வரக் காட்டி அவனைத்
தந்திர மாகத் தள்ளினாள்...அந்தோ !
" புத்தா சரணம்...போதி நாதா...
வஞ்சனை செய்ய வந்தேன் ; என்னை,
வஞ்ச வினையே வதைத்தது...செய்த
தீவினை யுண்டது தீப்பயன் ! என்னை
மன்னித் துனது மலரடி சேர்ப்பாய்"
என்று காளன் இறைவனை நினைந்தே,
இருட்கணை வாயில் உருண்டு வீழ்ந்தான்...
வெருவுறு பாழின் இருள்படர்ந் ததுவே !

கஉ. " தற்கொல் வியினை முற்கொன் றேன் " என
ஒருகொடி நகைத்தாள்...மறுகொடி " அந்தோ...

கணவனைக் கொன்ற கள்ளியா னேனே!
என்ன தீவினை யியற்றி முடித்தேன்!...
இந்த வினைப்பழி விடுமோ...தெய்வமே...
என்ன செய்வேன்...எனது நாதரே...
நானும் உம்முடன் ஏனிக் கணத்தில்
விழுந்துசா காமல் கழுந்துபோ லிருக்கிறேன்?
என்று கண்ணீர் இறைத்து நின்றாள்...
பிறகிவ் வுலகிற் பிறந்த பயனை
அடைந்தே சாதல் அழகெனக் கொண்டாள்.
“பிறந்தவ ரெல்லாம் இறந்து வினையாற்
பிறந்து பிறந்துயிர் துறந்துமண் ணுவார்.
சுற்றும் உலகில், சூழும் இயற்கையில்,
கற்றும் கேட்டும் கண்டும் பெற்ற
பொருளிற் செல்வ போக மதனில்...
எதுவே நிலையாம்? எல்லாம் ஓட்டம்...
இன்றுளார் நாளை யில்லையென் றுவார்...
குழந்தை யிறந்து குமரி யாகிக்
குமரி யிறந்து குலமக ளாகிக்
குலமகள் தாயாய்க் குலச்சுமை தாங்கித்
தாயும் பாட்டியாய்த் தளர்ந்து, தளர்ந்து
புதைகுழிக் கிரையாய்ப் போய்மண் ணுவதே
உடலின் கதையாம்...உயிரின் கதையோ...
மனத்தி லடைந்த மாசுக ளெல்லாம்,
பற்றாய்ப் பெருகிப் பந்த தொந்த
விகாரமாய் வளர்ந்து, வெவ்வினை பெருகி,
சித்தமும் புத்தியுஞ் சிதைந்து கெட்டு,
மோகங் கொண்டு, மூட மதியால்,
ஆவியும் விடுதலை யடைந்தி டாமல்,
மீண்டும் கருமம் வேண்டும் பலனை
அனுபவித் தனுபவித் தயர்வதை எண்ணின்,
ஆஆ...துன்பம்...ஆஆ...பிறவி!
வேதனை தப்பி விடுதலை பெறவே,
உடலையும் உலகையும் உள்ளே துறந்து,
அருளார் வாழ்வை அடைந்த சிலரே...
உயர்ந்த முத்தர், உற்றவர் வழியில்
செல்வேன் இந்தச் சென்மத் தொல்லையைக்

கொல்வேன்'' என்று குண்டலகேசி
ஆரியாங் கனைகள் அருகனை வணங்கும்
தவமடஞ் சேர்ந்தபின் சத்துவ போதாம்,
புத்தர் சேவடி புகலெனப் புகுந்தாள்.
புத்த பிக்குணி, புனித விரதையாய்க்
கலக்க மற்ற மனதைக் காத்துப்
புலன்களை யடக்கிப் புத்தியை வென்று,
வாழ்வை யெல்லாம் வன்றவ மாக்கினள்.
வெயிலுடன் மழையும் வெப்புடன் குளிரும்,
பசியும் விருந்தும், பழிப்பும் புகழும்,
சமமெனத் தாங்கித் தன்னூண் சுருக்கி...
காற்றையே நோக்குங் கப்பலைப் போலே,
உயிரைச் சார்ந்த உடலைப் போலே,
சுத்த சித்தனும் புத்த தேவனின்
அருளையே சார்ந்து மருளை விலக்கினள்.
தீக்காய் வோர்புகைத் தீதை நோக்கார்;
நோயர் மருந்தின் கசப்பை நோக்கார்,
வன்றவம் புரிவோர் வருத்தமே நோக்கார்;
நல்ல தாகு நலமே நோக்கார்;
தீய தாகுந் தீமையே நோக்கார்.
நலந்தீ தற்ற பொலங்கொள் சமதை
காக்குந் தாயர் கனலுறத் தவஞ்செய்
சங்க மெய்திய நங்கை கேசி
வினையினி யென்றும் விளையா வாறே
ஆசா பாச மறுந்துக நோற்று,
மாசறு மனமும், தேசுறு ஞானமும்,
பெற்றாள்; புத்த பிரானையுங் காணப்
பெற்றாள் பிறப்பின் பெரும்பயன் யாவும்
பெற்றாள் இனிமேற் பிறவாப் பெருமையே...
பிறவாப் பெருமையிற் பெருமையு முளதோ.

குண்டலகேசி அகவல் முற்றும்.

(அடுத்த இதழில் வளையாபதி தொடரும்.)

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

௬. குதிரை எங்கே?

"அப்பா! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?"

"நாங்கள் மதுரைவாசிகள்; அங்கிருந்துதான் வருகிறோம்!"

"உங்கள் முகத்தைப் பார்க்குபோது அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல் தோற்றுகிறதே! இப்படித் தனியே காட்டு வழியில் எங்கே கிளம்பிப் போகிறீர்கள்? என்ன காரியம்?"

"ஒன்றுமில்லை பாட்டீ! சும்மா இப்படிப் பல ஊர்களையும் பார்த்திட்டு வரலாமென்று புறப்பட்டோம்!...ஏன்?...நாங்கள் இங்கு தங்குவதில் தடங்கல் ஒன்றுமில்லையே?..."

"அப்படி ஒன்றுந் தடங்கல் கிடையாது!...ஆனால்..."

"ஆனால்...என்ன பாட்டீ?...மறையாமற் சொல்லுங்கள்!..."

"நீங்கள் என் குடிசையில் தங்குவதால் எனக்கொன்றும் கெடுதல் இல்லை!...ஆனால் என் பிள்ளை ஒருவன் இருக்கிறான்!...அவன் முரட்டுக் குணமுடையவன்!...கோபக்காரன்! ஆட்களோடு பழகவே தெரியாது!...அதுதான் திகைத்தேன்!..."

"பாட்டீ! இப்பொழுது அவர் எங்கே போயிருக்கிறார்?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான் வெளியே போனான்! திடீரென்று வந்தாலும் வந்திடுவான்!...திட்டமாய்ச் சொல்ல முடியாது!...இருந்தாலும் அதற்கென்ன?...நீங்கள் பயப்பட வேண்டாம்! அவன் வருவது தெரிந்தால் உங்களை மறைத்து வைத்துக்கொள்கிறேன்..."

"நாங்கள் பயப்படவில்லை பாட்டீ!...இருந்தாலும் சீக்கிரமாய்ச் சிறிது உணவெடுத்துக்கொண்டு கிளம்பி விடுகிறோம்..."

இவ்வாறு நம்பியும் பாட்டியும் அளவளாவிக் கொண்டனர். பின் தாம் கொண்டு வந்திருந்த துணி மூட்டையைப் புலவர் அவிழ்த்தார்.

"பாட்டீ! இதோ இந்தப் பழத்தைச் சாப்பிடுங்கள்!" என்று கிழவியிடம் இரு மாம்பழங்களை நீட்டினார்.

"வேண்டாமய்யா!...சாகப்போகிற கட்டைக்கு மாம்பழம் கிம்பழம் இதெல்லாம் என்னத்துக்கு?...நீங்களே சாப்பிடுங்கள்!" என்றாள் கிழவி.

"இல்லை பாட்டி! பல்லில்லாத வாய்க்குப் பாலும் பழமுந்தானே எளிதான உணவு? கூசாமல் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று நம்பி தனது இளமைக் குரலில் இனிதாகக் கூறியதும் பாட்டிக்கு மாம்பழத்தின் இனிப்பு மிகுதியாகத் தோன்றி விட்டது! மூவரும் வயிறு நிரம்பப் பல வகைப் பழங்களையுந் தின்று களித்தனர்.

தின்றதுபோக எஞ்சியிருந்த பழங்களைத் துணியோடே கிழவியிடம் கொடுத்துவிட்டு மதுரைக்காரர்களிருவரும் புறப்படத் தயாராயிருந்தனர்.

இதற்கிடையில் ஏதோ எண்ணியவள்போல் குடிசையின் அடுப்பங் கரைக்குள் நுழைந்த கிழவி ஒரு கும்பா நிறையப் பழைய சோற்றைப் பிழிந்து நன்றாக உப்பிட்டுப் பிசைந்து ஊறுகாயுடன் கொண்டுவந்து புறப் பட்டுக்கொண் டிருந்த மதுரைவாசிகள் முன்வைத்து,

"குழந்தைகளே!...என்னமோ இந்த ஏழைக்கிழவி உங்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவு இதுதான்! இதனை மறுக்காமல் சாப்பிட்டுப் போங்கள்!" என்று அன்புடன் கூறினாள்.

கிழவியின் அன்பை முறிக்க மனமில்லாமல் இருவரும் பழைய சோற்றை உண்ணத் துவங்கினர்.

இதே சமயம், குடிசைக்கு வெளியே மரத்தில் கட்டப்பட்டிருந்த குதிரைகளை யாரோ ஒருவன் முறைத்துக்கொண்டு பார்த்து நின்றான். அவனுடைய உருவம் குண்டு மரக்கால்போல் தோன்றிற்று! காதைத் தொடும் மீசைகளை முறுக்கிக்கொண்டு "திறுதிறு" வென விழித்துக் கொண்டு நின்றான். பின்னர் மெதுவாகப் புலவருடைய குதிரையின் கிட்டே அணுகி, அதனை அவிழ்த்தான். அதன் வாலை முறுக்கி விரட்டப் பார்த்தான். "படீர்" என்று அவனுடைய கைகளில் உதைத்தது குதிரை! ஒரே பாய்ச்சலாகக் கதறிக்கொண்டே ஓடிவிட்டது!

குதிரையின் உதையினால் ஏற்பட்ட காயத்தைத் துடைத்த வண்ணம் வாயில் வந்தபடி திட்டிக்கொண்டு திரும்பினான். திரும்பியவன் நேரே கிழவியின் குடிசைக்குள் நுழைந்தான்! குடிசையில் இருவர் உட்கார்ந்திருப் பதைப் பார்த்துவிட்டு,

"ஏ! கிழட்டுப் பிணமே! வீட்டுக்குள்ளே—யாரை யெல்லாம் கூட்டி வைத்துக் கூத்தாடுகிறாய்?..." என்ற அவன் விண்ணதிரக் கத்தியதி லிருந்து அவன்தான் கிழவியின் மகனான **சல்லியன்** என்பது தெரிந்தது.

அவ்வளவுதான்! கிழவியின் உடல் பதறிற்று! நாக் குழறியது! கை கால்கள் நடுங்கின! திகைத்துப் போய் நின்றுவிட்டாள்!

வாயில் வைத்த சோற்றுக் கவளத்தை விழுங்கக்கூட இல்லாமல் இமைகொட்டாமல் ஆச்சரியத்துடன் நோக்கினர் மதுரைவாசிகள்!

கொஞ்ச நேரங் கழித்துப் புலவர் தைரியமாகச் சல்லியனை நோக்கி, "ஐயா! தாங்கள் ஏன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்? ஏதோ களைப்பி னால் இங்கே தங்கிவிட்டோம்! இதோ போய்விடப் போகிறோம்! கோபம் வேண்டாமய்யா!..." என்று சமாதானப்படுத்தினர்.

"ஏய்! உன்கிட்டே யார் பேசினது? பேசாமல் வெளியே போ! நீ ஒன்றும் புத்தி சொல்லத் தேவையில்லை..." என்று "மடமட" வென முரட்டுக் குரலில் அதட்டினான் சல்லியன்.

இதைக் கேட்டதும் நம்பியின் கண்கள் சிவந்தன! கைகள் துடித்தன! மறைத்து வைத்திருக்கும் வாளை உருவி அந்த முரடனைத் துண்டித்து விடுவோமா என்று மனங் குமுறினான்! அதுவும் தன் மதிப்புக்குரிய புலவர் பெருமானை வாயில் வந்தபடி "போ! வா!" என்று சல்லியன் பேசியது அவன் மனதைத் துன்பப்படுத்தியது! உணர்ச்சி மிகுந்தமையால் கோபம் பொங்கும் குரலில் அரச கெம்பீரத்துடன் பேசத் தொடங்கினான்:—"அடே பயலே! அவரை யாரென்று எண்ணினாய்?...மரியாதை யில்லாமல் பேசினால் மரியாதை இழந்துவிடுவாய்!...எச்சரிக்கை!..."

இவ்வாறு அதட்டுவதற்குள் புலவர் இடைமறித்து, "நம்பீ! வேண்டாம்! வேண்டாம்! பதறாதே! ஒன்றுங் குடி முழுகிப் போகவில்லை!... அவனுடைய பேச்சினால் என் மதிப்பு ஒன்றுங் குறைந்துவிடாது!......" என்று ஆறுதல் கூறினார். பின் நம்பியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு குடிசையைவிட்டு வெளியேறினார்.

இருவரும் மரத்தினருகே வந்தனர்! குதிரை யொன்றைக் காணவில்லை! திடுக்கிட்டனர்! சுற்று முற்றும் பார்த்தனர்! கண்ணுக்கெட்டிய தூரம் வரை குதிரை காணப்படவில்லை!

"ஐயா! இதுவும் இந்த முரடனின் வேலைதான்! அவனைச் சும்மா விட்டுவிடக் கூடாது! இதோ அவனிடம் போய்க் குதிரை இருக்குமிடம் கேட்டு வருகிறேன்..." என்று நம்பி துடிதுடித்துக் கொண்டு நின்றான் முறுவலார் அவனைத் தடுத்து,

"வேண்டாம்! அவன் முரடன்! முரட்டுக்குணத்தில் எதையும் துணிவாகச் செய்துவிடுவான்! காரியம் கெட்டுப்போய் விடும்!..."

"இல்லை ஐயா! முரடனை எப்படியும் அடக்கித்தான் ஆக வேண்டும்! இல்லையானால் இவனால் உலகிலேயே பல தீமைகள் நிரம்பிவிடும்...!" என்று கூறிக்கொண்டே, இடுப்பிலிருந்த உடைவாளை உருவிய வண்ணம் கிழவியின் குடிசைக்குள் நுழைந்து,

"அடே! என் குதிரை எங்கே! சொல்கிறாயா? அல்லது விண்ணுலகம் போக மூட்டை கட்டுகிறாயா?......" என்று சிங்கம் போலச் சீறினான் நம்பி.

உடனே சல்லியன், "குதிரையா? கிதிரையா? எனக்கு ஒன்றுமே தெரியாதே!..." என்று விழுங்கிப் பேசினான்.

"சரி! நீ உண்மை சொல்லும்வரை உனக்கு இந்த உலகில் இடமில்லை" யென்று நம்பி வாளை யோங்கி வீசப்போகும் சமயத்தில், கிழவி

ஓடிவந்து அவன் கையைப் பிடித்திராவிடில் சல்லியன் தலை தரையில் உருண்டிருக்கும்!

சல்லியன் மனம் இப்பொழுதுதான் பதறிற்று! உடல் நடுங்கினான்! நம்பியின் கால்களில் வீழ்ந்தான்! தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டினான்! குதிரையைத் தான் அவிழ்த்துத் துரத்தியதைக் கூறித் தனக்கு அபயம் அளிக்குமாறு கெஞ்சினான்!

இளவரசனின் கோபம் தணிந்தது! "அப்பா! இதை அப்போதே சொல்லியிருக்கக் கூடாதா?...சரி! எழுந்திரு! குதிரை சென்ற திசையைக் காட்டு!..."என்று சல்லியனிடம் கூறி, அவனையும் கூட்டிக் கொண்டு புலவரிருந்த இடத்திற்கு வந்தான்! கிழவியும் பின் தொடர்ந்தாள்.

"ஐயா! இப்போது சல்லியன் சாதுவாய் விட்டான்" என்றான் நம்பி சிரித்துக்கொண்டே!

"எல்லாம் ஐயாவுடைய வாளின் மகிமைதான்! என்று தன் பொக்கு வாயினால் சிரித்தாள் கிழவி!

பின்னர், சல்லியன் புலவரையும் வணங்கி மன்னிப்பு வாங்கிக் கொண்டான்! குதிரை ஓடிய திசையையும் சுட்டிக் காண்பித்தான்!

பின்னர் நம்பி முறுவலாரைப் பார்த்து,

"ஐயா! நீங்கள் இந்தக் குதிரையுடன் இங்கேயே இருங்கள்! நான் எப்படியாவது உங்கள் குதிரையைப் பிடித்து வருகிறேன்!" என்று கூறினான்!

"வேண்டாம் நம்பீ! உன்னால் எவ்வளவு தூரந்தான் நடக்க முடியும்? நீ இங்கேயே இரு! நான் போய்ப் பார்த்து வருகிறேன்!" என்றார் புலவர்!

மீண்டும் இளவரசன் தானே போவதாக வற்புறுத்தினமையால் புலவர் அவனை மற்றொரு குதிரைமீது போகுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு நம்பியும் சம்மதித்தான்.

புலவர், கிழவியினுடைய குடிசையிலேயே தங்குவதாகக் கூறினார். இளவரசன் தான் புறப்படத் தயாரானான்! இப்பொழுது அவன் ஒரு வேடன்போல் மாறுகோலம் பூண்டுகொண்டான். முதுகில் அம்பறாத் தூணியும், இடது தோளில் வில்லும், இடுப்பில் உடைவாளும், தலையில் தலைப்பாகையும் அணிந்துகொண்டு குதிரையிலேறிச் சல்லியன் சுட்டிய திசை வழியே சண்டமாருத வேகத்தில் கிளம்பினான்.

(தொடரும்)

ஒளிக் கற்கள்

காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, B.A.

இயற்கையின் அழகு இணையற்ற அழகாகும். இயற்கையின் அழகுகளில் ஈடுபட்டு மக்கள் எய்தும் ஐம்புலவின்பங்களும் பேரின்பமாகும். பல நிறப் பூக்கள், பலவகை இன்னோசைகள், வகைவகையான மணம் முதலிய எல்லா இன்பப் பொருள்களுக்கும் இயற்கை வற்றாத ஊற்றாக இருக்கின்றது. இன்பமளிக்கும் இவ்வாற்றலை இயற்கை முழுவதுங் காட்டுவதில்லை; அவ்வப்போது ஒவ்வொன்றின் கோடியைமட்டுமே காட்டி மறைத்து விடுகின்றது. மின்னல் மின்னி மறைவதைப்போல் அழகுப் பொருள்களைத் தோற்றுவித்து, நீடிக்கச் செய்யாமல் மறைத்துவிடும் செயலே இயற்கையின் சிறப்பை மிகுத்துக் காட்டுவதாகும். கண்ணைப் பறித்தெழும் பகலவன் ஒளி மழுங்கி மறைகிறான்; கனைத்துக் குமுறியெழுங் கடலலைகள் திரைத்து அடித்து ஓய்கின்றன; பளிச்சென்று நிறங்காட்டி மிளிரும் பூக்கள் வாடி வதங்கி வீழ்கின்றன. இளவேனிலும் முதுவேனிலும், கோடையும், கூதிரும் மாறிமாறித் தோன்றி மறைகின்றன. மின்னனைய தோற்றமும் இடைவிடாத மாற்றமுமே இயற்கையின் அழகுத் திறத்திற்குத் திறவுகோல்கள் போலும்!

இவ்வாறு மாறிமாறி இன்பமளிக்கும் இயற்கைப் பொருள்களுள்ளும், மாறாமல் நிலைத்திருந்து இன்பமளிக்கும் பொருள்களும் சில உள. இடியும், புயலும், பருவமாற்றமும் அவற்றை ஒன்றும் செய்வதில்லை. காலத்தின் முழுஆற்றலை அவை எதிர்த்து நிற்கின்றன என்றே கூறலாம். அவற்றுள் ஒளிக் கற்களும் அடங்கும்.

ஒளிக்கற்கள் என்றது மாணிக்கம், வைரம், இந்திரநீலம் முதலிய ஒளிவிடும் கற்களையேயாம். நம் நாட்டார் பொதுப்பட இவற்றை 'நவமணிகள்' என்பர். கடல்படு முத்தும், பவளமும் இவ்வகையில் அடங்குவனவே. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஒளிக்கற்கள் உள என மேனாட்டாராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வகைப்படுத்திக் கூறியுள்ளார்கள்.

இயற்கைதரும் இந்த ஒளிக்கற்கள் இயற்கையின் ஆற்றலை யும் எதிர்த்து நின்று தம் ஆற்றலை வெளிப்படுத்திச் சிறக்கின் றன. மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரைப் போலத் தோற்றும் முத்து, பகலவன் தோற்றங் கண்டு மறைந்தழிவதில்லை. பசும்புல் நிறம் வாய்ந்து காணப்பெறும் பச்சைக்கல் அப் புல் லைப் போன்று காய்ந்து கரிவதில்லை. மக்கள் குருதிபோன்று காணப்பெறும் குருதிக் கல் (மாணிக்கம்), மக்கள் மாய்ந்து மறைந்தாலும் தம் நிறத்திற் குறைவதில்லை. தலைமுறை தலைமுறை யாகக் கைமாறிக்கொண்டே வந்தாலும் வைரம் தன் பளபளப் பிற் குறைவதில்லை.

பழகப் பழகப் பாலும் புளிக்கும்; பருகப் பருகத் தேனும் தெவிட்டும்; ஆனால் பார்க்கப் பார்க்க ஒளிக்கற்கள் சலிப்பளிப்ப தில்லை. பண்டேபோல் என்றும் புதுநிறங் காட்டி அவை ஒளி விருந்தளிக்கின்றன. வினைவறியாக் காலத்தே ஒளிக்கற்களைக் கண்டு வியந்த சிறுவனொருவன் தான் வயதேறி நரைத்துத் திரைத் துக் கிழத்தன்மை யடைந்த காலத்தும், அக் கற்களைக் கண்டால் முன்போலவே பார்த்து மகிழ்கின்றான். நிறத்தில் மாறுதிருந் தாலும் தம் மேற்படும் ஒளிக்கதிர்களின் ஆற்றலுக்கேற்ப ஒளிக் கற்கள் புதுப்புது நீர்மை காட்டிப் பளிச்சிடுகின்றன. மாணிக் கம் சிவப்புதான், மரகதம் பச்சைதான், வைரம் வெள்ளைதான், ஆனாலும், அவற்றின்மேல் காலை வெயிலும், மாலை வெயிலும், மின்சார ஒளியும் படுங்கால் அவை வேறு எத்தனை வகையான ஒளிநிறங்களைக் காட்டி இன்பமளிக்கின்றன! “அழகுடை யொரு பொருள் என்றும் இன்பமளிக்கும்” என்று ஆங்கிலப் பெரும்புலவர் கீட்ஸ் கூறிய உண்மைக்கு, ஒளிக்கற்களை விட வேறு சிறந்த எடுத்துக்காட்டுமுண்டோ!

ஒளிக்கற்களானு லென்ன? அவையும் வெறுங் கற்கள் தானே? கிடைக்கும் அருமையினாலும் விலையின் மிகுதியினாலும் அவை சிறப்புடைப் பொருள்களாகக் கருதப்படுகின்றனவே யன்றி, அவற்றால் மக்கள் பெறும் உண்மைப் பயன் யாது? இயற்கையில் அழகு வாய்ந்து தோன்றும் ஒரு பொருளுக்கு, இவ்வொளிக்கற்கள் எவ்வகையிற் புது அழகு அளிக்கப் போகின்றன? அழகுக்கு யாரே அழகு செய்வார்? நிலைத்த

உண்மைப்பயன் யாதொன்றும் அளிக்கவியலாத "ஆகுல நீர்மைய"வான ஒளிக்கற்களைப் போற்றிப் புகழ்தல் பைத்தியமே என்று இகழ்ந்து கூறுவாருமுளர். இது பிழைபட்டதொரு கூற்றாகும். சொல்வன்மையிலும், உண்மை யறிவிலும் சிறந்து விளங்கிய ஹென்ரி வார்டு பீச்சர் என்பவர் எப்பொழுதும் தம் சட்டைப் பையில் ஓர் ஒளிக்கல்லை வைத்திருந்தார். நினைத்த போதெல்லாம் அதனை அவர் எடுத்துப் பார்த்துப் பார்த்து அதன் அழகை வியந்து அகமகிழ்ந்தார். சிறந்த அவ்வியற்கைப்பொருள் அவருக்குப் புரையற்றதொரு மகிழ்ச்சியை அளித்தது. அவர் அதனை அணியாகச் செய்து அணிந்துகொள்ளவில்லை என்பது இங்குக் குறிப்பிடற்பாற்று. அரசர்களும், செல்வர்களும் அளவற்ற விலை கொடுத்து ஒளிக்கற்களை வாங்கிச் சேர்ப்பது அறிவின்மை யாகுமோ? உள்ளத்தனையது உயர்வாதலின், உயர்ந்த அழகுப் பொருள்கள் உயர்ந்த எண்ணங்களையே அகத்தில் எழுப்பும். ஒளிக்கற்களின் உயர்வை அறிந்து மதித்துப் போற்றும் ஆற்றல் வாய்ந்திருப்பது ஒருவனை அவனது தாழ்நிலையிலிருந்து மேனிலைக்கு உயர்த்துவதாகும். இவ்வாற்றல் நிரம்பிய குடிகள் நிறைந்த ஒரு நாடு பேரரசாகத் திகழ்தற்குரிய பெற்றிமை வாய்ந்ததொன்றாக உயர்ந்து சிறப்பெய்தும்.

ஒளிக்கற்களுள்ள இடத்தில், ஆண்மையும் வீரமும் சிறந்து விளங்கும். ஒளிக்கற்களாகிய அணிகளை அணிந்த ஒருவன் தன் புருவங்களை நெரித்தானானால் அண்டையிலுள்ளோர் நடுக்கமெய்துவர். என்? ஆக்கவும் அழிக்கவும் வல்ல ஆற்றல்வாய்ந்த தலைவன் அவன் என்பதை அக் கற்கள் குறிக்குமாகலின். ஒளிக்கற்கள் காரணமாக எத்தனையோ பேர் கடுந்துன்ப மெய்தியுள்ளனர்; உயிரையும் இழந்திருக்கின்றனர்; எத்தனையோ பெரும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இதுகாறுங் கூறியவாற்றால், நிலைத்து நின்று ஒளித்திறங் காட்டி மக்களுக்கு இன்பத்தை யளித்து, ஆண்மையையும் வீரத்தையும் எழுப்பி உயர்வையளிக்கும் ஒளிக் கற்கள், மக்களுக்கும் நாட்டிற்கும் ஒருங்கே ஒளியை (புகழை) அளிப்பனவாம் என்பது இனிது விளங்கும்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி

வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை,
கீழ்க்கலை யாராய்ச்சிக் கழகம், திருப்பதி

V

தமித்து நின்று ஒருவரை யொருவர் கண்டு உளம் கலந்து உணர்வொன்ற எய்திய காதல் பின்பு எவ்வகையில் வளர்கின்றது; இவர்களால் எவ்வண்ணம் வளர்க்கப் பெறுகின்றது என்பனவற்றை இனிக் காணலாம். செந்தமிழ்ச் செல்வியின் உள்ளத்தில் முளைத்திருக்கும் காதலை, அவள், பெருநாணும் பேரச்சமும் உடையளாதலின், பிறர்க்குச் சிறிதும் புலனாகாது மறைத்தொழுகுவாள், அவளோடு உடனிருந்து உடனுறைந்து உடன் பயின்று உடனெழுகும் உயிர்த்தோழிக்கும் வாய்விட்டு உரையாள். செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் பிற நலங்களும் மிகவுடைய இத்தமிழ் மகட்கு உயிர்த்தோழியாக இலகுபவள் அறிவிலும் ஒழுக்கத்திலும் சொல்நலத்திலும் எத்துணையும் குறைவில்லாதவள். அறிவு, அன்பு, அறம் என்ற மூன்றும் கலந்து பெற்ற பெண் வடிவமொன்று உளதாயின் அதனைத் தமிழ் மகளின் உயிர்த்தோழி என்று கூறலாம். அறிவே அவளது உள்ளம்; அன்பே அவளது சொல்; அறமே அவளது செயல். இத்தோழியின் துணைமை இருந்தாலன்றி, தமிழ் மக்கள் இருவர் பாலும் பிறந்த காதல் சிறக்குமாறு இல்லை யென்பதைத் தமிழ் மகள் நன்கு உணர்ந்து சில குறிப்புக்களால் அவள் தன் காதலனுக்கு உணர்த்தி விடுகின்றாள். அவள்தான் தோழியரிடையே இருக்குங்கால், காதலன் வரின் அவன் உணருமாறு, தன் உயிர்த்தோழியுடன் அடிக்கடி சொல்லாடியும் கட்கடையால் குறிப்பாய் நோக்கியும் உணர்த்துவள். அவன் அதனைப் பிழையற உணர்ந்து கொள்வன். இதுவேயன்றி அவனும் தமிழ் மகளைத் தனித்துக் காணுமிடத்து, "இனிவருங்கால் நீரின் தோழியுடன் வருக" (ஐங். 175) எனச் சொல்லால் சொல்லுவன். தோழியின் செய்கைகளைக் கண்டும் அவன் அவளை அறிந்து கோடலும் உண்டு.

இக்காலத்தே அவள் பெண்மை நலம் சிறந்து காதல் மாட்சியெய்தும் முதுக்குறைவு உடையளாயினும், இச்செறிக்

கப்பெறும் அத்துணை யருமைப் பாட்டினை எய்திலளாதலின், அவள் தோழியுடன் புறத்துச் சென்று பயிலும் இடமே தமிழ் மகன் தோழியின் மதியினை உடம்படுவிக்கும் முயற்சிக்கு ஏற்ற இடமாகிறது. அதற்குரிய செவ்வியைப் பெறுவதற்கு அவன் காலம் நோக்கியிருக்கின்றான். தமிழ்மகள் தினைப்புனம் காத் தற்குச் செல்லும் காலத்தை யறிந்து அதனை நன்கு பயன்படுத் திக் கொள்கின்றான்.

தமிழ்மகள் புனங்காத்து ஒழுகுமிடத்து, அவளுடன் உயிர்த் தோழியும் இருக்கின்றாள். இருவரும் ஒருங்கிருக்கும் செவ்வி யறிந்து, அவன் வேட்டம் செல்வான்போற் சென்று, "இங்கு யான் எய்த களிறு வரக்கண்டீரோ? மான் வரக்கண்டீ ரோ? பன்றி வரக்கண்டீரோ?" என்று வினவி நிற்பன். அல்லது, புதியோன்போல நின்று, அவர்களுடைய ஊரும் பெயரும் ஊர்க்குச் செல்லும் வழியும் உரைமின் என்று இரந்து நிற்பன். மேதக்க தழையொன்று புனைந்துகொண்டு போந்து, "இதனை ஏற்றுக்கொண்மின்" என வேண்டுவன். இவ்வாறு பலவகை யாலும் தோழிபால் சொல்லாடும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவள்பால், தான் தமிழ்மகள்பால் கொண்ட காத லறவினைக் குறிப்பால் தெரிவித்துவிடுவன்.

தமிழ்மகனது சொல்லும் செயலும் அவன் காதற்குறிப்பை நன்கு புலப்படுத்தக்காணும் தோழி, அவன்பால் பரிவு கொண்டு, தமிழ்மகளின் மனக்கருத்தை யறிந்துகொண்டு அவனை இத் தமிழ்மகள் கருத்துக்கு இசைவிக்கும் கடப்பாட்டினைப் பெறு கின்றாள். தமிழ்மகளின் பெருமையும் தோழியின் தோழமை யும் செயலின் அருமையும் பிறவும் ஒன்றற்கொன்று இலசவு று பிணங்குகின்றன. இந்நிலையில், அவர்களிடையே நிகழும் சொல்லாட்டுக்களைச் சிறிது காண்பாம். அச் சொல்லிடையே ஒளிரும் நுட்பமும் அறிவொட்பமும் பண்டைத் தமிழ் மக் களின் சீரிய நாகரிகத்தை இனிது விளக்குகின்றன.

செந்தமிழ்ச் செல்வியைத் தனித்துக் கண்டு காதலுற்றுக் கருத்தொன்றிய தமிழ்மகன், அவள்தன் தோழியுடன் இருக் கும் செவ்வி நோக்கியிருக்கின்றான். அவள் தோழியருடன் தினைப்புனம் காத்தற்கு வருகின்றாள். அவனும் அப் புனத்திற்

குப் போதருகின்றான். அவள் தன் தோழியருடன் கூடித் தினைக் குரல் கவரும் கிளிகளை ஓப்புகின்றாள். அக்கிளிகளின் கூட்டம், ஓப்புந்தோறும் நீங்கி, ஓப்பி ஓயுந்தோறும் வந்து புனத்தே படி கின்றன. அதனால், அவள் புனத்தே இருத்தலை அத்தமிழ்ச் செல்வமகன் உணர்ந்து, "செந்தமிழ்ச் செல்வி புனங்காவல் புரி வதை இக் கிள்ளைகள் நமக்குக் காட்டின ; "வெள்ளவாம்பின் ஊழிபோகியும் கிள்ளைவாழிய பலவே" (ஐங். 281) என்று வாழ்த்தி, "நன்றே செய்த உதவி ; நன்று தெரிந்து யாம் எவன் செய்குவம் (ஐங். 288) நெஞ்சே!" என்று தனக்குள்ள நன்றி யறிவைப் புலப்படுத்தி மகிழ்ந்து கொள்கின்றான்.

பின்பு, அவன் அச்செல்வியும் உயிர்த்தோழியும் பிறரும் கூடி நீராடச் செல்லுதல் கண்டு மெல்ல மறைவிருந்து பார்த்து, "தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும், கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும், புணைகை விட்டுப் புன லோ டொழுகின், ஆண்டும் வருகுவள் போலும்" (குறுங். 222) எனத் தோழியின் பெருமையும் துணைமையும் தெளிந்து கொள் கின்றான். இதுபோலும் நெறிகள் பல உண்டு. தோழியைத் தேர்ந்து கொண்டதும் அவளை யணுகி "களிறு, மான், பன்றி முதலியன வரக்கண்டதுண்டோ" என்று வினவுவன் ; தக்க விடை பெறாது நீங்குவன். பிறிதொருகால், தோழியும் செல்வி யும் ஒருங்கிருப்பப் போந்து, ஊரும் பேரும் பிறவும் வினவி, "பெருங்கல் வேலிச் சிறுகுடி யாது எனச் சொல்லவும் சொல்லீ ராயின்,....................செங்கேழாடிய செழுங்குரல் சிறுதினைக், கொய்புனங் காவலும் நுமதோ? (நற். 213) என்று வினவி, அவர் கள் முகந்தாராமை கண்டு நீங்குவன். இந்நிலையில், அவன் வரவும், அதுகண்டு செல்வி ஒழுகும் ஒழுக்கமும் நோக்கமும் பார்வையும் தோழியால் குறிக்கொண்டு நோக்கப்படும்.

நம் செல்வியோ அத் தமிழ்த் தோன்றலை முன்பே கண்டு காதல் சிறந்து நிற்கின்றாளாதலின், அவன் வருந்தோறும் தோழி யோடு சொல்லாடுந்தோறும், கண்டு உள்ளத்தே உவகைமிகி னும் அதனை மறைத்து ஒன்றும் அறியாள்போன்று ஒழுகுகின் றாள். தோழியும் பேரறிவினளாதலின், அச் செல்விக்கும் செல்வ னுக்கும் முன்பே காதலுறவு உண்டாகியிருத்தலை ஒருவாறு

உணர்ந்து கொள்கின்றாள். அதனை நன்கு அறிந்துகோடல் குறித்து மிக நுட்பமாக அவளுடன் பேசி ஆராயத் தொடங்கு கின்றாள்.

புனங்காத் தொழுகும் நாளில், ஒருநாள் தோழியும் செல்வி யும் ஒரு புடையே இருக்கின்றனர். ஏனை மகளிர் புனத்தின் பல மருங்கிலும் இருந்து புள்ளினங்களை ஓப்பிக்கொண்டிருக் கின்றனர். தனிமை நன்கு அமையக் கண்ட நம் அறிவுடைத் தோழி, செல்வியின் முகத்தை நோக்கினள்; பின்பு ஏதோ கூறு வாள் போலச் சொல்லெடுத்தாள். செல்வியும் அவளுடன் நோக் கினள். அது கண்ட தோழி, "உண்கண்ணாய்! பார்த்தனையா, ஒருவன் புலிவேட்டம் மேற்கொண்டு அதன் அடிச்சுவடுபற்றி வருவான்போல வில்லும் அம்பும் ஏந்தித் தலையில் கண்ணி சூடிப் பன்னாளும் வருகின்றான். வருபவன், என்னை நோக்கி, சில குறிப்புக்களைக் காட்டுவனே யன்றித் தன் மனத்தே உற்ற வருத்தத்தை வாயால் சொல்லாமலே போய்விடுவன். என் மனத்தே அவன் வடிவே பதிந்துவிட்டது. அவன் நினைவே மிகுந்தது. அதனால் யானும் இரவெல்லாம் கண்ணுறக்கம் இன்றி வருந்தாநிற்பே னாயினேன். இவ்வாறே சில நாட்கள் கழிந்தன. அவனும் தன் கருத்தை என் முன்னின்று உரைத்தல் ஆற்றான்; நமக்கோ நம் காதற்குறிப்பை வாய்விட்டுரைப்பதும் பெண்தன்மை யன்று. இதனால், சில நாட்களில் அவன் என்னைக் காணாமலே போய்விடுதலும் உண்டு. என்னாலும் இனிப் பொறுத்தல் முடியாது என்றொரு நிலையுண்டாயிற்று. ஆகவே, யானும் அரிதில் துணிந்து ஒரு நாணின்மை செய்தேன்" என் கின்றாள். இது கேட்டதும், செல்வி முகம் சிவப்ப, உள்ளத் தெழுந்த அருவருப்பால் நுதலொளி மாற, வாயில் புன்னகை தவழ, "நடந்தது என்னை" என்கிறாள். அவள் முகவேறு பாட்டைத் தோழி குறிக்கின்றாள்.

அதன்மேல் தோழி, மேலும் கூறலுற்று,

"........கூறுநதால்! எனல்
இனக்கிளி யாம்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசல் ஊர்ந்தாட, ஒருஞான்று வந்தானை
'ஐய, சிறிது என்னை ஊக்கி' என (யான்) கூறத்

'தையால்! நன்று' என்று அவன் ஊக்கக், கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பில்; வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்,

என்று கூறினளோ இல்லையோ, செல்வி மிகச் சினந்து, வாய் துடிப்ப நகைத்து, "சீச்சீ" என்று சொல்லி, "பின்பு நடந்தது என்னே! சொல் சொல்" என்கின்றாள். அவட்குத் தோழி, முறுவலித்து,

"மெய் அறியாதேன் போல் கிடந்தேன் மன்"

என்கின்றாள். செல்வி, பொறாமை மீதூர, சினத்தீ கிளர, "இனி, இதை என்னிடம் சொல்லாதே; போ; அவ் வன்கணன் யாவன்" என்று சொல்லவும், தோழி, அவளை விடாதே, "இதைக் கேள்" எனப் பற்றி நிறுத்தி,

"..ஆயிடை
மெய்யறிந்து எற்றெழுவேனாயின், மற்று, ஒய்யென
'ஒண்குழாய்! செல்க' எனக்கூறி விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்" (கலி. 37)

என்று முடிக்கின்றான். செல்வியும், "வாழ்ந்தேன்" என வாய் வெருவுகின்றாள்.

இச் செயல்களால், தமிழ்ச் செல்விக்கு அச் செல்வன்பால் முன்னுறவு உண்டென்பதைத் தோழி யறிந்துகொண்டு, அவளை நோக்கி, "நெருநல்வந்த அவன் இன்றும் வருவன்;

"இன்றும், தோலாவாறில்லை, தோழி! நாம் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றாதலும் அறியான்; ஏசற்று
என்குறைப் புறநிலை முயலும்
அண்க ணாளனை நகுகம் யாமே" (அகம். 32)

என்று மொழிகின்றாள். இவற்றைக் கேட்டு அச் செல்வி படும் பாடும், பார்க்கும் பார்வையும் குறிப்பும் தோழியின் ஐயத்தை அறவே நீக்கிவிடுகின்றன.

இஃதிவ்வாறாக, முன்னை நாள் செவ்விபெறாது வாடிச் சென்ற தமிழ் மகன் மறுநாள் மகளிர்க்குரிய அழகிய தழை

யொன்று புனைந்துகொண்டு தோழிபால் வருகின்றான். அத் தழையின்கண் முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலத்துப் பல் வகைப் பூக்கள் விரவியிருக்கின்றன. அதுகண்டு, " நீ கொணர்ந்த இத் தழையின்கண் வேறு நிலத்துப்பூக்கள் இருக்கின்றன; எங்கள் 'குன்றம் குருதிப்பூவின் குலைக்காந்தட்டு' (குறுந். 1); ஆதலின் வேண்டேம்; வேண்டியணியின் வேறு பல ஐயத் துக்கு இடனாம் " என மறுத்து விடுகின்றாள். அச் செல்வன் சொல்லாடுந் திறனின்றி ஏங்கி நீங்குகின்றான். செல்வியும் அத னைத் தான் ஏற்று அணிந்து அவனை மகிழ்வித்தற்குக் கூடாமை யால் மனம் மறுகி வருந்தும் வருத்தத்தை மறைத்துக்கொண்டு ஒழுகுகின்றாள். இச் செயலானும் இருவர்பாலும் முன்னுறவு இருத்தலைத் தோழி தெளிகின்றாள்.

பின்னொரு நாள், அச்செல்வன் இச் செல்வியும் தோழியரும் கூடித் தொடுக்கும் தழைபோலும் தழையுடை யொன்று தொடுத்துக்கொண்டு போந்து, தோழியை இரந்து நின்று " இதனை ஏற்றுக்கொண்மின் " என்கின்றான். இனி, மறுத் தற்கு இயலாமையின் ஏற்றுக்கொண்டு செல்வியை யடைந்து,

"......................குன்ற நாடன்
உடுக்கும் தழைதந் தனனே; யாம் அஃது
உடுப்பின் யாய் அஞ்சுதுமே; கொடுப்பின்
கேளுடைக் கேடு அஞ்சுதுமே; ஆயிடை
வாடல கொல்லோ தாமே, அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே" (நற். 359)

என்று கூறுகின்றாள். இதற்குள், அவன் தன் வேண்டுகோளை, இத்தோழியும் செல்வியும் கேளாராயின், தன் காதலைப் பலரறி யத் தோற்றுவிக்கும் நெறியை மேற்கொள்வதா? யாது செய் வது? என்று பலபட நினைந்து தோழியின் காதில் விழுமாறு, "மாவென மடலொடு மறுகில் தோன்றித் தெற்றெனத் தூற்ற லும் பழியே, வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (குறுந். 17) எனக் கூறி இனைகின்றான்.

உடனே தோழி அவன் முன்னே நின்று, இருவர் குறிப் பும் நன்கு தெரிந்தும் அவனை மறுத்து,

இவளே,
கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே.
நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்குநலன் எவனோ ?
புலவு நாறுதும் ; செலநின் றீமோ
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே ;
எம்ம னோரில் செம்மலு முடைத்தே " (நற். 45)

என்று மொழிகின்றாள். இச்சொற்களால் அச்செல்வன் சிறிதும் தளராது மேன்மேலும் வந்து எவ்வாறேனும் தோழியின் துணை பெற்றுச் செல்வியைக் கூடும் கருத்தினனாகின்றான். அவன் நெஞ்சில், செல்வியைக் காணுந்தோறும் வேட்கை மிகுகின்றது (குறுந். 165). மறுமுறையும் தோழியை இரந்து கேட்கவே விழைகின்றான்.

" அருளினும் அருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல்மா நெஞ்சே என்னதூஉம்
அருந்துய ரவலம் தீர்க்கும்,
மருந்துபிறி தில்லை யான் உற்ற நோய்க்கே " (நற். 140)

என்று பன்முறையும் முயன்று முடிவில் தோழி தன் குறையை முடித்துத் தர உடன்படுமாறு செய்துகொள்கின்றான்.

இனி, தோழி செல்வியோடு சொல்லாடி அச் செல்வன் குறை முடித்தற்கு முயலும் முயற்சி மிக்க அருமை வாய்ந்ததாகும். செல்வி, அச் செல்வன் தன் காதலன் என்பதை ஒரு போதும் வாய்விட்டுத் தோழிபால் உரைத்ததில்லை. ஆகவே, அவளைத் தன் கருத்திற்கு உடன்படுவித்தலில் தோழி தன் அறிவை மிக்க நயமும் நுட்பமும் அமையக் கையாளும் கடமையளாகின்றாள்.

செய்திகளும் குறிப்புகளும்

குலசை வள்ளியம்மையார் பள்ளிக்கூடப் பழைய மாணவியர் கழகத் திறப்பு விழா

நிகழும் 18-3-43 வியாழக்கிழமை மாலை 5 மணிக்குத் திருநெல்வேலி மாவட்டத் தண்டல் நாயகர் (Collector) உயர்திரு திவான்பகதூர் V. N. விசுவநாதராவ் எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் திறப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் திருநெல்வேலி நாட்டுப் போர்முனை, கண்காணிப்பாளர் வித்துவான் திரு. கு. அருணாசலக் கவுண்டரவர்களும், சென்னை நார்த்விக் மகளிர் கல்லூரித் தலைமையாசிரியராயிருந்த திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையாரவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். அம்மையார் சொற்பொழிவைக் கேட்டபின் தலைவரவர்கள் தம் மனைவியாரை அழைத்துக்கொண்டு வந்திருப்பின் நலமாயிருந்திருக்குமெனச் சொன்னார்களாம். சுகுமாரி என்ற நாடகம் இளமாணவியர்களால் திறமையாக நடிக்கப்பெற்றது. நன்றி கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

சேலம் சூரமங்கலம் பொதுநல சேவாசங்கம்

இச்சங்கத்தின் ஆதரவின்கீழ் 28-3-'43 மாலை 7-30 மணி முதல் 9 மணி வரை திருப்பாய்த்துறை இராமகிருஷ்ண மடம் உயர்திரு சித்பவானந்த அடிகளாரின் தலைமையில் பொருஞ்சொல் விளக்கனார் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், நாட்டாண்மை உயர் நிலைப்பள்ளி, அரியலூர்; திருச்சி ஜில்லா.) "இராமகிருஷ்ணரும் இராமலிங்க அடிகளும்" என்ற பொருள்பற்றி மிகவும் சுவைபட விரிவுரை ஆற்றக் கற்றோரும் மற்றோரும் கேட்டு இன்புற்றனர்.

சேலம் மேட்டுத் தெருவு சுகவனநாதர் திருக்கோயில் 30-3-43 செவ்வாய் மாலை 7 மணி முதல் 9-மணி வரை ஷை யார் "வாளால் மகவரிந்து ஊட்டவல்லார்" என்ற பொருள்பற்றியும், 31-3-43 புதன் ஷை இடத்திலேயே, "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லார்" என்றது பற்றியும், குகை திருச்சி ரோட், சமரச சன்மார்க்க சபையில் 1-4-'43 வியாழன் மாலை 7 மணி முதல் 10 மணி வரையில் "தொண்டு செய்து நாளில் கண்ணிடந்து அப்பவல்லார்." என்றதுபற்றியும் செவ்வாய்ப்பேட்டை அப்புச் செட்டித் தெரு, செந்தமிழ்ச் சங்கத்தில் 2-4-43 வெள்ளி மாலை 7 மணி முதல் 9-30 மணி வரையில் "திருஞான சம்பந்தரின் சீரிய கொள்கை" என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றிச் சேக்கிழாரின் தெய்வத்தன்மையினையும், பெரிய புராணத்திலுள்ள அறநீதிகளையும் நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய வழிவகைகளையும், எடுத்து விரிவாக விளக்கிச் சொன்னார்கள். இப் பெரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்ட தமிழ் இளைஞர்கள், பெரிய புராணத்தை ஊன்றிக் கற்றுப் பயனடைய வேண்டுமென்னும் ஒரு புத்துணர்ச்சியினைப் பெற்றனர்.

சேலம் ஓரியண்டல் சினிமா உரிமையாளர் திரு. S. S. வேலாயுதம் பிள்ளை அவர்களும், சேலம் சூரமங்கலம் டாக்டர் திரு. S. M. நமசிவாய முதலியாரவர்களும் வேண்டும், பொருள், இடவசதி முதலியன செய்து இச் சொற்பொழிவுகளை நடாத்தி மக்கள் தமிழை இன்புறுமாறு செய்தது மிகவும் பாராட்டத்தக்க தொன்றாகும். இம்முறையில் தமிழ் நாட்டிலுள்ள செல்வர்கள் பல புலவர்களையும் கொண்டு தமிழ் விரிவுரைகள் தங்கள் ஊரில் பல இடங்களில் செய்வித்துப் புகழும் புண்ணியமும் பெறுமாறு எல்லாம்வல்ல அம்பலவாணன் அருட்டிருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,
ரா. பெருமாள் பிள்ளை.

தமிழிசை முழக்கம்! தமிழிசை வெற்றி!

திருநெல்வேலி இசைமகாநாடு

பங்குனிமீ 14, 15உ (1943 மார்ச்சு 27, 28) தேதிகளில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு, இசை மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றன. அவ்வமயம் திருவாளர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசை யாசிரியர் மைலம் திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள், திருநெல்வேலி அரசிய லார் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி இசை யாசிரியர் நெல்லை திரு. சங்கரன் பிள்ளை அவர்கள் இவ்விருவராலும் தனித்தமிழிசை யரங்குகள் நடத்தப் பெற்றன. பெரும்பாலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப் பேரா சிரியர் திருப்பாம்பரம் சுவாமிநாத பிள்ளை அவர்களின் இராக இலக்கணங்க ளாலும், பொருந்திய ஓசைப்பெருக்காலும் ஓசை அமைக்கப்பெற்ற முத்துத்தாண்டவர் பாடல்களை, மைலம் வச்சிரவேலு முதலியார் அவர்கள் தம் இசைத்திறனால் கேட்போர் மனங் கவரும் வண்ணம் உயர்ந்த இசை நடையில் அவையோரை மகிழ்வித்தார்கள். இரண்டாவதாக, நெல்லை திரு. சங்கரன் பிள்ளை அவர்கள் வேதநாயகம் பிள்ளை பாடல்களையும், இசைத் தமிழ்ச்செல்வர் திரு. இலட்சுமண பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற பாடல்களையும், தேவாரம் திருவாசகம் முதலிய இன்சுவைப்பாக்களையும் இராக பாவத்துடன் இனிமையாகவும் ஓசைநயத்தோடும் பாடினது அவை யோரைப் பரவசப்படுத்தியது. இவ்விரு இசைவாணர்களும் தமிழே இசைக் குப் பொருத்தம், இசைக்கேற்ற மொழி தமிழே, என்னும் உயரிய உண்மை களை மெய்பித்தனர். கடைசியாக இவ்விரு அரங்குகளிலும் தலைமை தாங்கிய இசைத்தமிழ்ச் செல்வர் திரு. இலட்சுமணப் பிள்ளை அவர்கள் இவ்விரு இசைவாணர்களின் இசைத்திறனைப் போற்றி வாழ்த்தி, மறைந்து கிடந்த இவ்வுண்மைத் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்த வள்ளல் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களையும் போற்றித் தமிழிசை இயக்கம் இன்றுபோல் உயர்ந்தோங்குக என வாழ்த்தினர்.

நம்பியகப்பொருள் விளக்கம்

பழைய உரையுடனும் பல்வகைக் குறிப்புக்களுடனும்; திருத்தமான உயர்ந்த புதிய பதிப்பு கலிக்கா கட்டடம். விலை ரூ. 3 0

பாலமிழ்தம் (The Milk Nectar)

எஸ். எஸ். தேவர் எழுதியது.

(திரு. இளவழகனாரவர்கள் எழுதிய தோற்றுவாயுடன்)

இதன்கண், பசுவையும் பாலையும் பற்றித் தமிழ் இலக்கியங்களிற் கண்ட குறிப்புக்களைக் கொண்டு விரிந்ததோர் தோற்றுவாய் எழுதப்பட்டிருக்கின்றது. பால் வகைகளும் அவற்றின் நன்மை தீமைகளும், ஆ காத்தோம்பல், பால் பண்ணை அமைத்தல், பாலின் உட்பொருளும், உய்வனவுகளும் (Vitamin) முதலியன பற்றி விளக்கமாய் எழுதப்பட்டிருக்கின்றது. கருத்துக்களின்மேல் பயன்தரக் கூடிய சில அட்டவணைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பலவகை உருவப்படங்களுடன். விலை ரூ. 1-4

கழகத் தமிழ் வினாவிடை (முதற் புத்தகம்)

துடிசைகிழார் அ. சிதம்பர முதலியாரவர்கள் எழுதியது.

இதன்கண், தமிழ்நாடு, மக்கள், மொழி, நூல், கொள்கை என்னுந் தலைப்புக்களில் தமிழ் மக்கள் செம்மையாக வாழ்வதற்குத் தெரிந்துகொள்ள வேண்டிய இன்றியமையாத கருத்துக்கள் வினாவிடையாக எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 3

தொல்காப்பிய மூலம் (வெளிவந்துவிட்டது)

(கையடக்கப் பதிப்பு; உரைக்குறிப்புடன்)

கழகத் தமிழ்ப் புலவர் திரு. இளவழகனார் அவர்களால், அதிகாரங்கள் பொருளுக்கேற்பப் பல உட்பிரிவுகளாகப் பாகுபடுத்தப் பெற்றும், சூத்திரங்கள் சீர் பிரிக்கப்பெற்றும், ஒவ்வொன்றிற்கும் விளக்கமான தலைப்புக்கள் எழுதப்பெற்றும், அவ்வவற்றின் அடியிலேயே விளக்கமான உரைக்குறிப்புக்கள் எழுதப்பெற்றும் இருக்கின்றன. மிகச் சிறந்த பதிப்பு.

15-5-43 வரை குறைந்த விலை

கலிக்கா கட்டடம் விலை ரூ. 2-8 ரெக்சைன் கட்டடம் ரூ. 4-0;
பின்னர் ரூ. 3 0-ம் ரூ. 5-ம் ஆகும்.

இரண்டு அரிய குறள் நூல்கள்

திருக்குறள் முச்சீர் மணிகள் (கருத்துரையுடன்)

இதன்கண், 'நன்றி மறப்பது நன்றன்று', 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' என்பன போன்ற 227 தொடர்கள் திருக்குறளிலிருந்து பொறுக்கி எடுத்துத் தரப்பட்டிருக்கின்றன. அவை முடிந்த கருத்துடையவை. மூன்று சீர்த் தொடர்களானமையால் 'முச்சீர் மணிகள்' என்று இந்நூலுக்குப் பெயர் ஆகும். இந்நூல் மாணவர்கட்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயனுறும். இதன் விலை அணா 2

திருக்குறள் நாற்சீர் மணிகள் (கருத்துரையுடன்)

இதன்கண், 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்', 'அறிவிலார் என்னுடைய ரேனு மிலர்' என்பன போன்ற நான்கு சீர்த் தொடர்கள் 175 அடங்கியிருக்கின்றன. இதன் விலை அணா 2

கழகப் புதிய வெளியீடுகள்

சீவகசிந்தாமணி ஆராய்ச்சி

இந்நூல் 21 தலைப்புக்களில் ஆராயப்பட்டிருக்கின்றது. சிறந்த ஆராய்ச்சி நூல். 250 பக்கம் இதன் விலை ரூ. 2

மணிமேகலைச் சுருக்கம் அடிக்குறிப்புடன்

கதைத் தொடர்புடைய இச் சுருக்க நூல் சிறந்த பயன்தரும். இதன் விலை ரூ. 2

ஷேக்ஸ்பியர் கதைகள்: ஏழாம் புத்தகம்

இதன்கண், நான்காம் ஹென்ரி (Henry IV) மன்னன் ஜான், (King John) தைமன், (Timon of Athens) காதற் சேமிவு (Love Labours Lost) ஆகிய நான்கு கதைகள் எளிய நடையில் தரப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 12

ஔவையார் திருவுள்ளம்

கழகப் புலவர் திரு. இளவழகனாரவர்கள் எழுதியது. இதன்கண் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்ற நான்கு நீதிநூல்களும் எளிய முறையில் ஆராயப்பெற்றிருக்கின்றன. இந் நீதி நூல்கள் இளம்பருவத்தினர்க்கு மட்டுமன்றி முதுமையிலும் படித்துணர வேண்டியவையாகும். ஔவையாரின் உயர்ந்த உள்ளக் கருத்துக்களை இதன்கண் தெள்ளத்தெளிய அறிந்து மகிழலாம். நீதிநூல்கள்மேல் இதுவரையில் இத்தகைய ஆராய்ச்சி நிகழ்ந்ததில்லை.

ஆசிரியர்களும் மாணவர்களும் ஏனையோரும் இதனை வாங்கிக் கற்று இன்புறுவார்கள் என்பது திண்ணம். இதன் விலை அணா 10

யசோதர காவியம் பதவுரை விளக்கவுரைகளுடன். (அச்சில்)

பன்னிருபாட்டியல் விளக்கக் குறிப்புடன் (அச்சில்)

சித்தாந்த வினாவிடை

பள்ளிக்கூடங்களில் மாணவர்களைக் கொண்டு உரையாடல் நடத்துவதற்குப் பெரிதும் பயன்படும். (அச்சில்)

கலித்தொகைச் சொற்பொழிவு (இரண்டாம் பதிப்பு) விலை அணா 10

சிறுகதைப் பாட்டு நூல்கள்

இளமாணவர் கண்ணைக் கவர்வன

(அ) பிறந்த நாள் பரிசு அணா 3 (உ) ஓர் எலிக்குடும்பம் அணா 3

வெளியார் பதிப்புகள்

அக்கினி (தாராசங்கர் பானர்ஜி)	2	0
நாஞ்சில் நாட்டுமருமக்கள் வழிமான்மியம் (தேசிகவிநாயகம் பிள்ளை)	1	0
ஹேம நளினி (சரத் சந்திரர்)	0	12
சைவமத வினாவிடை (வித்வான் மறை. திருநாவுக்கரசு)	0	8

திருஅருள் மொழி

இதன்கண் தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலியவற்றின் பத்திச் சுவை நிரம்பிய பாடல்கள் உரையுடன் அடங்கியுள்ளன. சைவம் வைணவம், சைதன்யம், கிறித்தவம், இஸ்லாமியம் முதலிய சமயங்கள் கற்பிக்கும் நீதிநெறி விளங்குகின்றது. மூவர் தேவாரத்தினின்று தொகுத்த சிவப் பெயர் வரிசை-1008-ம் பிரபந்தத்தினின்று தொகுத்த திருமாற் பெயர் வரிசை 1008-ம் அடங்கியுள்ளன. 604 பக்கம் இதன் விலை ரூ. 3 0

Printed by Mr. C. M. GOVINDARAJAN, at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, G.T., Madras. Edited and Published by Mr. V. Subbiah for The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd. No. 6, Coral Merchant St., G.T., Madras.